737

REGD NO: M 1530.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

OF BOOKS JAN 1928 MADRAS

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol IX | OCT. 1927 | No. 10

PRINTED AND PUBLISHED BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B:—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	395
ஹிதோபதேசம்	396
கபீர்தாஸர்	397—413
முகம்மது நபி சரித்திரம் ...	414—420
கோபமாகாது	421
நரகாசுரன் கதை	422—425
லக்ஷ்மணனுடைய கோபம்	426—433
பீஷ்மர்	434—439
ஆன்ஞேர் வீரமொழிகள் ...	441—442

குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனல் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

TRADE MARK.

கௌரி பானம்ருதம்

காப்பிக்குப்பதிலாக உபயோகிப்பது. நம் தேசத்து மூலிகைகளின் கிழங்குகள், வித்துகள், புஷ்பங்களால் தயாரிக்கப் பெற்றது. காப்பியைப்போலவே ருசியும் மணமும் உள்ளது. ஒருமுறை உபயோகித்தவர்கள், மேலும் மேலும் உபயோகிக்க விரும்புவார்கள்.

இதன் அரிய குணங்கள்:

இரத்தசுத்தி, பித்தசாந்தி, உஷ்ணசாந்தி, உண்டாக்கி மலச்சிக்கலை நீக்கிப் பசிதீபனத்தைக்கொடுக்கும். ஞாபகசக்தி ஆரோக்கியம் இவைகளை விருத்திசெய்யும். கணைச்சூடு, மூலச்சூடு, பித்த எரிச்சல், வாந்தி; மயக்கம், மேகவெட்டை, நீரிழிவு இவைகள் நீங்கும். டின் ஒன்றுக்கு விலை அண 8. டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 5-12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கௌரி சுகாநந்தனி

கபாலரோகங்களுக்குத் தைலம்

இந்தச் சுகந்த பமரிளத் தைலத்தைக்கொண்டு ஸ்நானம் செய்து வருவதால் திரிதோஷ பீனிசங்கள், கண், கை கால் இவ்விடங்களிற் காணும் எரிச்சல், நித்ரா பங்கம், மயக்கம், வெட்டை ரோகங்கள், மேக காங்கை, ஞாபகக்குறைவு. கபால நோய்கள், ஜுரத்தால் நேர்ந்த துற்பலம், கொடிய தலைநோய் இவைகள் நீங்கும்; கூந்தல் கருத்து வளரும். இத்தைலமானது மூளைக்கு அதிக வேலை கொடுக்கும் வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்கட்கு அதிக பயனைத் தரக்கூடியது. 6 அவுன்ஸ் புட்டி ரூபா 1-4-0

கௌரி தந்த ரட்சணி பற்பொடி.

இந்தப் பற்பொடியைக் கொண்டு தினந்தோறும் பல் துலக்கி வந்தால், பல், ஈர், நாக்கு இவைகளிலுள்ள சகல நோய்களையும் கண்டித்து வாய் நாற்றத்தைப் போக்கி பற்களுக்கு உறுதியையும் முத்தைப்போல் ஒளியையும் தரும்.

டப்பி 1-க்கு அண 3

விலாஸம்:—டாக்டர் வி. ஆர். சுந்தரம்,
ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்திய மந்திரம்.
பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.

REGISTRAR OF BOOKS
MADRAS
JAN 1928
ACL-TNAL
03530
2624

ரோல்டுகோல்ட் ஸ்பிரிங் செயினும் பௌண்டன் பேனாவும் இனாம்!



22 காரட் ரோல்டுகோல்டு கை கெடியாரம் 5 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான காலத்தைக் காட்டும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும் விலை ரூ. 6-8-0 தபால் சார்ஜ் வேறு.

லண்டன் வாட்ச் ஹவுஸ்,

9, பெத்துநாய்க்கன் வீதி, பார்க் டவுன், (ப) சென்னை.

நஞ்சன்கூடு சத் வைத்தியசாலை

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின் சிறந்த ஆயுர்வேத மருந்துகள்:- குடும்பரக்ஷிணி சாவனப்ராசா, கஸ்தூரிமாத்திரை, தன்வந்தரி ரஸாயனம்.

யூனைடெட் கன்ஸர்ன், 6, பந்தர் தெரு, மதறாஸ்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால தீபம்.

இந்நூல் ஆதிகாலத்தில் பல ரிஷிகளால் கையாளப்பட்டு வடமொழியில் முன்னோர்களால் பனை ஓலைச்சுவடியில் எழுதியிருந்ததை இப்போதுதான் தமிழில் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது, இப் புத்தகம் ஒன்றுமட்டும் உங்களிடமிருக்குமானால் யார் எக்கேள்வி கேட்டாலும் எக்ஷணிபோன்ற பதிலும் நீங்கள் நினைக்கும் சகல காரியத்தின் பலாபலன்களையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். உங்கள் வாழ்நாள் முழுமையும் ஜோஸியரைத் தேட அவசியமே இல்லை. உண்மையை அறியுங்கள். விலை ரூபா ஒன்றுதான். இப்பத்திரிகையைக் குறிப்பிட்டு எழுதுபவர்களுக்குத் தபால் செலவு இனாம்.

ஜானகிராமன் & கம்பெனி, வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்.

உயர்ந்த கண்ணாடிகள் ! குறைந்த விலை !!

ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும்.

எங்களிடத்தில் கண்களுக்கு குளிர்ச்சியைத்தரக் கூடியதும் சாஸ்திரயுக்தமாய் செய்யப்பட்டதுமான ஸ்மோக் கண்ணாடிகள் ஷெல் பிரேமில் போடப்பட்டது விலை ரூபா 4 0 0. மற்ற கண்ணாடிகளும் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

Consulting Optician : C. D SHESHACHALAM
Late of Messrs Lawrence & Mayo and E. Barnes.

PAID. URGENT. FILED.
Cancelled. Registered. Delivered.
DESPATCHED. Duplicate. ORIGINAL
Received. STAMPED. Book-Post.

ஆபிஸ்களுக்கும், வியாபாரிகளுக்கும் உபயோகப்படக்கூடிய ‘ஹெல்போ ஆபீஸ் அவுட்பிட்டானது’’ உயர்ந்த ரப்பரினால் கை தேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டு மேலே குறித்துள்ள குறைந்த விலைக்கு இங்கிபேட்டுடன் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். எழுத்துகள் மேலே காட்டியிருப்பதைவிட பெரியதாகவும் அழகாகவும் இருக்கும். மேலே காட்டியதுபோல் 12 ரப்பர் ஸ்டாம்பு உள்ள செட்டு 1-க்கு ரூ. 1. தபால் சார்ஜ் 5 அணா

மில்லர் அண்டு கோ,
228, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.

சமயலுக்குச் சிறந்தது.

ருக்மணி குக்கர்

அடுக்கு
விபர புத்தகம் இனும்.
ஏஜண்டுகள் தேவை.

வீட்டிலுஞ் சரி, வெளியிலுஞ் சரி, இரவிலுஞ் சரி, பகலிலுஞ் சரி, நல்ல சமயலுக்குகந்த அடுக்கு இதுதான். 1, 2, 4, 6, 8 பேர்களுக்குச் சரியான 5 அளவுவில் ரூ. 13, 18, 22, 27, 33-ல் கிடைக்கும். ரயில் கூலி வேறு.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம் (6) சென்னைப்பட்டணம்.

பாலவிநோதினி புஸ்தகசாலை.

தங்களுக்கு வேண்டிய தமிழ் புஸ்தகங்கள் எல்லாம் நமது புஸ்தகசாலையில் கிடைக்கும். வேண்டும் புஸ்தகங்களுக்கு எழுதவும். "பாலவிநோதினி" சந்தாதாரர்களுக்கு நமது சொந்த புஸ்தகங்களுக்கு ரூபாய்க்கு ஒரு அணா கமிஷன் கொடுக்கப்படும்.

பாலவிநோதினி புக் டிபோ,
323, திருவொற்றியூர் ஹைரோட்,
சென்னை.

DIAMONDS! சீமைக் கமலங்கள்!

T. B. MEHTA & SONS

டி. பி. மேதா அண்டு சன்ஸ்

Diamond Merchants. வயிர வியாபாரிகள்.

Dealers in Rubies, Emeralds Etc.

சிவப்பு, பச்சை முதலிய கற்களை வியாபாரம் செய்பவர்கள்

Manufacturing Jewellers

நகை செய்பவர்கள், நகை வியாபாரிகள்,

Park Town, Madras.

பார்க் டவுன், சென்னை.

FEDERATED INDIA

An All India Weekly

With an influential circulation in British Provinces and Indian States Full of interesting articles on all topical affairs.

Subscription Rs. 5 per annum only

An excellent medium for high class advertisements.

For Contract Rates Apply to—

MANAGER

FEDERATED INDIA

Tondiarpet, Madras.

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக் கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 48, சைனாபஜார் ரோட், சௌகார்பேட், மதராஸ்.

MADAN MANJARI
PILLS

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம் மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி, நபும்சகத்துவம் இவை போன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின விலை ரூ. **1 0 0**

மதன் மஞ்சரி அபீஸ். 48. சைனா பஜார் ரோட், மதராஸ்.

கிர்னர் அண்டு கம்பெனி,

69, மலையப்பெருமாள் தெரு,

G. T. மதராஸ்.

ரிவால்வர்கள், துப்பாக்கிகள், ரைபில்கள், பிஸ்தல்கள், இவைகளுக்குத் தோட்டாக்களும், மருந்து, கேப்பு, ரவை முதலியவைகளெல்லாம் புது மாதிரிகள் எப்பொழுதும் எங்களிடத்தில் தயாராயிருக்கின்றன. மற்ற இடங்களைவிட விலை சரசமாய் கிடைக்கும்.

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த இரகசிய
புஸ்தகம் தயாராகிவிட்டது!

இல் வாழ்க்கையின் இரகசியங்கள்

நண்பர்களே! இப்புத்தகத்தில் ஸ்திரீ புருஷர்கள் இன்புற்றிருக்கும் விதங்களும் எந்த வேளையில் இன்புற்றிருக்க வேண்டுமென்பதும், பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணமும், அதைப்போக்கடிக்கும் சுலபமான வழிகளும், ஸ்திரீகளின் அமிர்தநிலை உள்ள இடமும் நேரமும் இவையறிந்து சங்கமம் செய்யவேண்டிய வழிகளும், கருவிருப்பது ஆணு, பெண்ணு, என்றறியும் உபாயமும், மனம்போல மக்களைப் பெரும் வழிகளும், ஸ்திரீபுருஷர் மலட்டின் காரணமும், அதைப்போக்கடிக்கும் சுலபமான உபாயமும், மாதவிடாயைப்பற்றிய மர்மமும், கருப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய கிரமங்களும், அப்போது உண்டாகக்கூடிய வியாதிகளும், அவைகளைச் சுலபமாய்ப் போக்கிக்கொள்ளும் உபாயங்களும், சுகப் பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்களும், மிகத்தெளிவாக செந்தமிழ் நடையில் விவரமாய் எழுதப்பட்டிருக்கின்றன. நம் முன்னோர்களான ரிஷிகள் எழுதிவைத்துப்போன இல் வாழ்க்கையின் ரகசியங்களையே இப்பொழுது புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண், பெண்ணினிடத்தும் இந்நூலின் ஒரு பிரதி இருந்தேதீரவேண்டும்.

உடனே எழுதுங்கள். ஷை நூலின் கிரயம் ரூ. 2-0-0.
எல்லா புத்தகவியாபாரிகளிடமும் கிடைக்கும்.
அல்லது எமது விலாசத்திற்கு எழுதவும்.

வாசன் புஸ்தகசாலை, 97, அண்ணாபிள்ளைத் தெருவு,
ஜி. டி. மதராஸ்.

பேடன்ட் மருந்துகளுக்கு

சகாயமான இடம்

HILTON & Co.,

No. 32, Broadway, Madras.

மருந்து சாமான்கள் மொத்தமாயும் சில்லரை யாயும் விற்கப்படும்.

சார்ஜுகள் மிகவும் சகாயம். வெளியூர் ஆர்டர்களை முக்கியமாய் கவனிக்கப்படும்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A. SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

டாக்டர் ஜீ. பி. என்பவரின்

சுகந்த மூக்குத்தூள்.

இதை உபயோகித்தால் ஜலதோஷம் ஒற்றைத் தலை வலி, மண்டைக் குத்தல் உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கும்.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

புட்டி 1-க்கு விலை அணா 4.

மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.

குருபசவா அண்டு கம்பனி லிமிடெட்

தபாற் பெட்டி நெ. 510.
தந்தி விலாசம் "மெடிகேடட்"
} நெ. 1. அனுமந்த ராயன் தெரு, பார்க் டவுன் சென்னை.

பிரபஞ்சசுகத்திற்கு திவ்ய ஔஷதம்! 2-மணி நேரத்தில் அபூர்வகுணம்!!

நெப்போலியன் மாத்திரை

இம்மருந்து இராத்திரிவேளையில்ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீர்யம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2-மணி நேரத்திற்குள் அதிகமான சம்சார சுகத்தைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்யநஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தாலும் அதைத் தவராமல் கட்டுப்படுத்தும், இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் துரப்பியாசத்தினாலுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

20 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூபா 2.

வி. பி. தபால் சார்ஜ் வேறு.

நாவல்டி ஸ்டோர்ஸ்,

தபால்பெட்டி நெ. 119, சென்னை.

எங்கும் புகழ்பெற்ற

A. S.

சுகந்த மூக்குத்தூள்

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் கண்டிக்கும் வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

A. S. சுகந்த மூக்குத்தூள்.		M. J. பரிமள மூக்குத்தூள்.	
புட்டி 1-க்கு	0—4—0	சேர் 1-க்கு	1—8—0
டஜன் 1-க்கு	2—4—0	டஜன் 1-க்கு	2—0—0
சேர் 1-க்கு	3—0—0		

குணம்மணம்காரம்,வாடை முதலியவை ஒருங்கேஅமையப்பெற்றது.

A. S. பட்டணம் பொடி

சேர் 1-க்கு ரூ. 0—12—0 வீசை 1-க்கு 3—4—0

தபால் சார்ஜ் பிரத்யேகம். பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,

106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை,

P. B. No. 1201, MADRAS (B).

உங்களுக்கு வேண்டிய காப்பு ஆயுதங்கள்.

இரட்டைக் குழாய் பிரீச் லோடிங் துப்பாக்கிகள்
ஒத்தைக் குழாய் பிரீச் லோடிங் துப்பாக்கிகள்
இரட்டைக் குழாய் கேப் துப்பாக்கிகள்
ஒத்தைக் குழாய் கேப் துப்பாக்கிகள்

ரிவால்வர்கள், பிஸ்டல்கள், சுற்றுக்குழாய்த் துப்பாக்கிகள், தற்காப்புக்குவேண்டிய ஆயுதங்கள், பந்தயவிளையாட்டிற்கு வேண்டிய அழகிய ஆயுதங்கள் முதலியவை எங்களிடம் இருக்கின்றன. படங்களுடன் கூடிய காட்லாக் எழுதினால் இனாமாக அனுப்பப்படும். பலவித துப்பாக்கி மருந்துகள் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

என். வி. ராமானுஜம் செட்டி அண்டு கோ,
(1863-ம் வருஷம் ஸ்தாபனம்).
12. பாபம்ஸ் பிராட்வே, மதராஸ்.

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம் இவைகளெல்லாம் அடைவது எப்படி? எமது "ஆநந்த குண போதினி." யினால் தான்.

இது அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப்பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.
அவர்களால் சிறப்பாக எழுதப்பட்டு வருகிறது.

வருஷசந்தா:—உள்நாட்டிற்கு ரூ. 1 வெளிநாடுகளுக்கு ரூ. 1-4-0 மாதிரிப் பிரதி இனம்.

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்.
ஆநந்த குண போதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்,

புதிதாக வெளிவந்தது!　　　　உடனே எழுதுங்கள்!!

ஹிப்னாடிஸம் மெஸ்மெரிசமெனும்
வாயுவேக மனோவசிய சாஸ்திரம்



இந்த நூலில் மனோவசியத்தைப் பற்றியும், பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படிப் பேசுவது என்பதைப் பற்றியும் சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களைத் தூங்கவைக்கும் வழிகளைப் பற்றியும், மனோவசிய சக்தியினால் நாம் உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மைகளைப் பற்றியும் இனிய நடையில் நன்கு எழுதப்பப்பட்டிருக்கின்றது. படங்களுடன் கூடிய இந்நூலின் விலை ரூ. 1½.

சதிபதிகளின் மர்மம் அல்லது
மானிட ரகசிய சாஸ்திரம்

இதில் முக்கியமாய் வசந்தனுக்கும், சுலோசனாவுக்கும், வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச் செய்யும், விதமும், சிசு உற்பத்தி நேர்மையும், சிசுவைக் கவனிக்கவேண்டிய ஏற்பாடும்; உண்மையான ஜாதி பேதங்களும், அவைகளின் லட்சணங்களும், உலகில் சதிபதிகள் இன்பவாழ்க்கை நடத்துவதற்கு இன்றியமையாத பலவிஷயங்களும் பிரகஸ்பதி பகவான் தேவேந்திரனுக்கு அருளிச்செய்த சிறந்த பலவிஷயங்களும் அமைந்துள்ளன. அழகிய சித்திரப்படங்களுடன் விலை. ரூ. 1.

ஷண்முகானந்தம் புக்டிபோ;
நயினிப்ப நாயக்கன் தெரு; பி. டி. சென்னை.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு -1லை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை விக்கு விலை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாடல் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0
விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகையறா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு, கம்பெனி,
நெ. 44. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

மலம் தாராளமாய்ப் போனால் வியாதிகள் அணுகா.

TRY ONCE மாதவமணி TRY ONCE

இது ஒன்றே சகலவிதமான வியாதிகளுக்கும் அமிர்த சஞ்சீவி போன்றது. குழந்தைகள் முதல் ஸ்திரீ புருஷர்கள் வரையில் இவ்வரிய மதுரமான அல்வாவை அன்புடன் புசிக்கலாம். பத்தியமே கிடையாது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் யாத்திரைவாசிகளிடமுமிருந்தால் வியாதிகள் இல்லாமல் வாழலாம்.

வாத பித்த சிலேஷ்மத்தினாலுண்டாகும்

மலச்சிக்கல்	கைகால் பிடிப்பு	மார்பு அடைப்பு
கைகால் குடைச்சல்	சளி இருமல்	விரை வாதம்
பித்த மயக்கம்	இடுப்புப் பிடிப்பு	விரை நோய்
வயிறு உப்பசம்	திமிர் வாய்வு	சாதம்ஜீரணிக்காமை
அஜீரணம்	ஓடு வாய்வு	வயிற்று நோய்

இவை முதலிய கொடிய வியாதிகளை நாலு தினத்திற்குள் சௌக்கியப்படுத்தி சந்தோஷிக்கத்தகுந்தது. டப்பி 1-க்கு ரூபா 1, 3 டப்பி ரூபா 2-8-0.
மாதவன் டிபோ, 32, கந்தப்பமுதலி தெரு யானைகவுனி, மதராஸ்.

தமிழ் நூல்கள்

எமது காரியாலயத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

சதகங்கள் (குறிப்புரையுடன்).

	ரூ.	அ.	பை.
குமரேசசதகம்	0	5	0
கோவிந்தசதகம்	0	2	0
அறப்பளீசுர சதகம்	0	5	0
திருவேங்கட சதகம்	0	5	0
தண்டலையார் சதகம்	0	3	0

பாராயணநூல்கள் (குறிப்புரையுடன்).

கந்தர் கலிவெண்பா	0	1	6
சரஸ்வதி அந்தாதி	0	1	6
அபிராமி அந்தாதி	0	1	6
கந்தரனுபூதி	0	1	6
திருமுருகாற்றுப்படை	0	2	0
நால்வர் நான்மணிமாலை	0	1	6
விநாயகர் அகவல்	0	1	0
இலக்குமி தோத்திரம்	0	1	0
ஆனந்தலகரி	0	1	6
சௌந்தரியலகரி	0	1	6

நீதிநூல்கள் (குறிப்புரையுடன்).

	ரூ.	அ.	பை.
திருக்குறள்	0	8	0
நாலடியார்	பதிப்பு		
நீதிநெறி விளக்கம்	0	1	6
ஆசாரக்கோவை	0	2	0

(பதவுரையுடன்).

வாக்குண்டாம்	0	1	6
கொன்றைவேந்தன்	0	1	6
வெற்றிவேற்கை	பதிப்பு		
நல்வழி	,,		
நன்னெறி	,,		

திருக்குறள் (பரிமேலழகர் உரை) பாகட் எடிஷன்.

திருக்குறள் விளக்கும் நூல்கள் (குறிப்புரையுடன்).

சிவசிவ வெண்பா	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா	0	2	0
இரங்கேசவெண்பா	0	2	6
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6

திரட்டு நூல்கள்.

திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	0
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு	0	3	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத்திரட்டு	0	10	0

இலக்கணமும், நிகண்டும்.

	ரூ.	அ.	பை.
நன்னூல்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0

வசன நூல்கள்.

ஆன்றோர் சரித்திரம்	0	5	0
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்டவாசகம்	0	5	0
விநோதரசமஞ்சரி	0	8	0
பரமார்த்தகுரு கதை	0	4	0
சாவித்திரி	0	6	0

நாவல்கள்.

இராஜரிஷி (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்) ...	1	4	0
ருவெங்கார்	1	8	0
பஞ்சதந்திரம்	0	8	0
மகாதேவன் ஒரு இனிய நாவல்	0	10	0

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road,

Madras.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 9 | 1927 ஸு அக்டோபர் மாதம் | பகுதி ௧0

தெய்வ வணக்கம்

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
  எக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள்பெரு மானுனை வணங்காத மூடர்தலை
  இகழ் விறகெடுக்குந் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
  கலநீர் சொரிந்த வழுகண்
கடவுணின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
  கைத்திழவு கேட்குஞ் செவி
பந்தமற நினையெண்ணாப் பாவிகள்தம் நெஞ்சம்
  பகீரென நடுங்கும் நெஞ்சம்
பரமநின் றிருமுன்னர் குவியாத வஞ்சர்கை
  பலியேற்க நீள் கொடுங்கை
சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
  தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
  சண்முகத்தெய்வ மணியே. (திருவருட்பா.

ஹிதோபதேசம்

"பாபீநாம் கர்ம ஹீநாநாம்
அலஸாநாம் துராத்மந:
ஜீவனம் ஹரிநாமஸ்ய
கீர்த்தனம் ஸ்ரேயோபவேத்—."

என்று பெரியோர் கூறுகிறார்கள். அதாவது பாபியாயினும் கர்மஹீனனாயினும் துஷ்டனாயினும் துராத்மாவாயினும் பகவந்நாமத்தை பஜித்தால் ஜீவனமும் ஸ்ரேயஸ்ஸும் உண்டாகும்—என்பதாம். ஆகையினால் பகவானுடைய நாமஸங்கீர்த்தனம் செய்யச் சிறுவயதுமுதல் பழகிவரவேண்டும். பகவானுடைய நாமஸங்கீர்த்தனத்திற் பழக்கமேற்பட்டால் தீய நடவடிக்கைகள் கிட்ட அணுகா. பரிசுத்தத் தன்மை தானே அமையும். தீயில்விழும் தன் குழந்தையைத் தாயானவள், எப்படி விழவொட்டாமல் பாதுகாப்பாளோ அப்படி பகவான் தன்னை நம்பிச் சரணமடையும் பக்தனைப் பாபத்தீயில் விழவொட்டாமல் பாதுகாப்பாராகையினால், பரிசுத்தனாகிய உன்னை அவர் கைவிடமாட்டார்.

பகவான் பக்தனைக் காப்பது திண்ணமென்பது—பிரஹ்லாதன், துருவன். மார்க்கண்டேயன் முதலிய பக்தர்களுடைய சரித்திரங்களினாலே தெரிந்துகொள்ளலாம். ஆதலால் பகவானிடம் பக்திசெலுத்துவதில் நாளுக்குநாள் பழக்கம் அதிகப்படும்படி அவருடைய துதிகளை ஓதி உணர்ந்து மகிழுங்கள்.

பிறகு வயதுவந்தபின் பக்தி. முக்தி—இவையெல்லாம் பார்த்துக்கொள்ளலாமென்று அசட்டையாயிராதேயுங்கள்—

"வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபால கனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே—".

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியுள்ளதையும்—

"வாழ்வாவது மாயம் உடல் மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல்—பசிநோய் செய்தபரிசாம்
தாழாதறம் செய்மின்றடங் கண்ணன் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மென்னீரே—".

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய தேவாரத்தையும் கவனியுங்கள்.

கபீர்தாஸர்

பரதகண்டத்தில் கங்காநதிதீரத்தில் விளங்கும் காசிமாநகரில் தமால் என்னும் பெயர்கொண்ட முகம்மதியரொருவர் வாழ்ந்துவந்தார். இவர் ஈகை, பொறுமை, இரக்கம், ஸத்தியம், முதலிய உத்தம குணங்களுக்கு இருப்பிடமாய் விளங்கினர். இவர் ஜீவ ஹிம்சை செய்ய அஞ்சும் இயல்பினர்; தெய்வபக்தி யுடையவர். இவர் தறியில் ஆடைநெய்யும் தொழிலை மேற்கொண்டு ஜீவனம் செய்துவந்தார். திருக்குறள் என்னும் தமிழ்வேதம் பாடியருளிய திருவள்ளுவரும் நெசவுத்தொழிலையே தமக்குத் தொழிலாகக்கொண்டு ஜீவித்து வந்தார்.

நெசவுத்தொழில் பாபமற்றதொழில். முன்னுளில் நெசவுத்தொழிலை மேற்கொண்ட தொழிலாளிகள் இந்தியாவில் எங்கும் பெருகிப் பரவியிருந்தனர். இப்போதும் கைக்கோளர், சாலியர், ஜேடர் முதலிய நெசவுத் தொழிலாளர் நம்தேசத்திலிருந்து நெசவுத்தொழில் செய்துவருகின்றனர்; ஆனல் பஞ்செடுத்து நூல் நூற்கும் வழக்கத்தை நிறுத்திவிட்டனர். சீர்மையிலிருந்து நூலவரவழைத்து அந்த நூலால் ஆடைநெய்கின்றனர். அப்படிச்செய்வதால் சீர்மை வியாபாரிகள் லாபமடைகின்றனர். அந்த லாபமும் நம்முடைய தேசத்தவர்

களே அடையவேண்டுமென்பது பல தேசாபிமானிக ளுடைய கருத்து. ஆகையினுல் மகாத்மாகாந்தி முதலி யவர்கள் ராட்டினத்தில் நூல் நூற்க வேண்டுமென்பதை யும் அப்படிப்பட்ட நூலினுல் நெய்த ஆடையையே உடுக்கவேண்டுமென்றும் போதிக்கத்தலைப்பட்டு இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்கின்றனர். நாட்டில் நூல் நூற்பது அபிவிருத்தியாகுமானுல் நமது தேசத்து வறுமை நீங்கும். அப்பொழுது "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை'' என்று பெரியார் கூறியுள்ளபடி எல்லாரும் சுகமாய் வாழ்வார்கள். கொலை, களவு முத லிய குற்றங்கள் தலைகாட்டா.

இப்படிப்பட்ட சிறந்த தொழிலைமேற்கொண்ட தமால் ஜிஜ்ஜாபீபி என்னும் பெயர்கொண்ட ஒருமாதை மணந்து அந்த அம்மாளுடன் இல்லறதர்மத்தைச் சரி வர நடத்திவந்தார்.

தெய்வபக்தியும் தருமகுணமும் வாய்ந்த இவர் களுக்குக் குழந்தை யில்லாமலிருந்தது. அதனுல் இவர் கள் மனவருத்தமுற்றுப் பகவானைச் சதாகாலமும் தியானஞ் செய்துகொண்டிருந்தனர். இப்படியிருக் கையில் ஒரு நாள், இருவரும் கங்காநதிக்கு நீராடச் சென்றனர். அங்கே நதியில், ஒரு கிளிஞ்சல் மிதந்து கொண்டுவந்தது. அதைக் கண்ட தமால் ஆச்சரியத் துடன் அதை யெடுத்துத் திறந்து பார்த்தார். அதில் ஓர் ஆண்குழந்தை இருக்கக்கண்டு வியப்படைந்து, "குழந்தையில்லாமல் வருந்திய நமக்கு ஆண்டவன் இக்

கபீர்தாஸர் நெசவு செய்தல்.

குழந்தையை அளித்துள்ளார். நாம் பாக்கியம் செய்தோம்” என்று கூறிக் குழந்தையை மனைவியிடம் கொடுத்தார்.

மனைவி, அக்குழந்தையை “என் கண்ணே, செல்வமே, சீரே, என்னையாளவந்த தெய்வமே! என்குல விளக்கே என்று கூறிக் கொஞ்சி முத்தமிட்டு உச்சி மோந்து மார்புறத்தழுவி எடுத்துக்கொண்டு கணவனுடன் வீட்டிற்குச்சென்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அதைவளர்த்து வந்தாள். அந்தக் குழந்தைக்கு முகம்மதிய வம்சப் பெரியோர்களெல்லாரும் சேர்ந்து கபீர் என்று பெயரிட்டார்கள்.

கபீர் வாலிபதசையை அடைந்தவுடன், அவர் தம் தந்தை செய்துவந்த தொழிலாகிய நெசவுத்தொழிலையே தமக்கும் தொழிலாகக்கொண்டு வேலைசெய்து வந்தார். ஆனால் கபீர் முகம்மதிய மதப்படி தமது தொழுகையைச் செய்யாமல் சதாகாலமும் ஸ்ரீராமபிரானையே தியானம் செய்வதும் அவரையே புகழ்ந்து பாடி மகிழ்வதுமாயிருந்தார். தாய் தந்தையர், ஜாதிக்கு விரோதமான செய்கையைச் செய்வது கூடாதென்று அவருக்குப் பலமுறையும் சொல்லிப்பார்த்தார்கள். கபீர் கேளாமல் எப்போதும் ஸ்ரீராமபிரானையே பாடித் துதித்துக்கொண்டிருந்தார். அதனால் அவரை அநேக முகம்மதியர் வெறுத்தார்கள். கபீர் ஸ்ரீராமனைத் தியானஞ்செய்வதும் துதிப்பதுமாயிருந்தாரே ஒழிய முகம்மதியரையாவது அந்தமதத்தையாவது பழிக்கவில்லை;

அந்த மதத்தினிடம் விரோதங்கொள்ளவுமில்லை. நடையுடைபாவனைகளில் முகம்மதியரைப்போலவே இருந்து வந்தார். இந்தச் செய்கைகளினால் இந்துக்களில் அநேகர் அவரை வெறுத்துவந்தார்கள்.

இப்படியிருந்த கபீர் தினந்தோறும் தாம் செய்ய வேண்டிய நெசவுத் தொழிலைச் சரியாகச் செய்யாமல் ஒரு பித்தனைப்போலிருந்தும் வந்தார். அதனால் அவருடைய தாய்தந்தையர் அவரைக் கண்டிக்கத்தலைப்பட்டார்கள். ஒருநாள் அவர் தந்தை கபீரைநோக்கி, "அடே கபீர், நான் வெளியேபோய் வருவதற்குள் நீ இந்தத் துணியை நெய்து முடிக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னைத் தண்டிப்பேன்" என்று கூறிவிட்டு வெளியேசென்றார். கபீர் தமது தந்தையின் சொற்படி தறியில் உட்கார்ந்து துணியை நெய்யத்தொடங்கினார்.

துணி நெய்கையில், அவர் ஸ்ரீராமா, ஸ்ரீராமா என்று ஸ்ரீராமஸ்மரணை செய்துகொண்டேயிருந்தார்; அப்பொழுது அடிக்கடி தம்மைமறந்து சும்மாவிருப்பதும் பின்கொஞ்சநேரத்திற்கெல்லாம் தமது நினைவையடைந்து "ஐயோ நெய்யமறந்தோமே" என்று எண்ணி மீண்டும் நெய்வதுமாக விருந்தார். பொழுது மலைவாயில் விழும் தருணமாய்விட்டது. அப்பொழுது கபீர், "என்னசெய்வேன். பொழுதுபோய்விட்டதே! நெய்துமுடியவில்லையே! ஸ்ரீராமா"—என்று கூறிப் பழையபடி நெய்தார். மறுபடியும் முன்போல் ஸ்ரீராமத் தியானத்தில் தம்மை மறந்துவிட்டார்.

கபீர் இப்படித் தம்மை மறக்கவே பகவான் ஸ்ரீராமர் அவர்மீது இரக்கங்கொண்டு, தாமே தறியில் உட்கார்ந்து அந்த ஆடையை நெய்துமுடித்துவிட்டுப் போய்விட்டார். பகவான் இப்படிச் செய்துவிட்டுச் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் கபீர், விழித்துக்கொண்டு, வழக்கம்போல் நெய்வதற்குப் பார்க்கையில் ஆடை முழுவதும் நெய் திருக்கக்கண்டு, ஆச்சரியப்பட்டுப் பின் பகவானுடைய திருவருள் இது என்று உணர்ந்து, மகிழ்ந்து ஸ்ரீராமனைப் பாடித் துதித்துக் கொண்டிருந்தார்.

அப்பால் அவர் தந்தை வந்ததும், "அடே கபீர், ஏனடா பாடிக்கொண்டிருக்கிறாய்? துணியை நெய்து விட்டாயா?" என்று கேட்டார். கபீர், இதோ நெய்து விட்டேன்" என்று கூறி ஆடையை அவரிடம் கொடுத்தார். அவர் பார்த்து ஆச்சரியப்பட்டு, "அடே கபீர், இந்த ஆடையைக்கொண்டுபோய் இப்போதே கடைத் தெருவில் விற்றுக்கொண்டுவா" என்று கூறி ஆடையை அவரிடம் தந்தனுப்பினார்.

கபீர் அந்த ஆடையை எடுத்துக்கொண்டுபோய்க் கடைவீதியில் ஒருபக்கம் நின்று விலைகூறினார். வழியே போகிறவர்களில் அநேகர் அந்த ஆடையைக் கண்ணாலே பார்த்துவிட்டுப் போய்விட்டனர். கபீர் உங்கள் மனதுக்குத் தோன்றும் விலையைக்கொடுங்கள்" என்று கூறினார். அது ஸ்ரீராமபிரானே தமது திருக்கரத்தினால் நெய்த ஆடையாதலினால் விலைமதித்திடற் கரியதாயிருந்தது. அதனால் அவர்கள் பார்த்துவிட்டு, இதற்குரிய விலைகொடுத்து நம்மால் வாங்கமுடியாதென்று போய்

விட்டனர். இதற்குள் பொழுதுபோய் இருள்சூழ்ந்து கொண்டது. கபீர், "இனி யாரிதை வாங்கப்போகிறுர்கள்?" என்றெண்ணி வருந்தி ஸ்ரீராமனைத்தியானித்தார். ஸ்ரீராமபிரான் இச்சமயத்தில் பிராமணனைப்போல் கபீரின்முன்போய், "ஐயா இந்த வஸ்திரத்தில் பாதியாவது எனக்குக்கொடும். நான் போர்த்துக்கொள்ள வஸ்திரமில்லாமல் கஷ்டப்படுகிறேன்" என்று யாசித்தார். அவர்மீது இரக்கங்கொண்டு அந்த வஸ்திரத்தில் பாதியைக் கிழித்துக் கபீர் அவரிடம் கொடுத்து ஸ்ரீராமா— என்றுகூறி மகிழ்ந்தார்.

பிராமணர் வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டதும் "நீர் சுகமாக வாழக்கடவீர்!" என்று ஆசீர்வாதம் செய்து மறைந்தார். கபீர் அதுகண்டு வியப்படைந்து அங்கிருந்த ஒரு பாழ் மண்டபத்திற்போய் உட்கார்ந்து ஸ்ரீராமஸ்மரணைசெய்தார். அப்பொழுது அங்கே ஸ்ரீராமர் ஒரு பிகிரைப்போல் வந்து, ".கபீர் கட்டத் துணியில்லாமல் கஷ்டப்படுகிறேன். உன்னிடமிருக்கிற வஸ்திரத்தைக் கொடுக்கமாட்டாயா?" என்று கேட்டார். கபீர் அவரிடத்தன்புகூர்ந்து தம்மிடமிருந்த பாதி வஸ்திரத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டு ஸ்ரீராமத்தியானஞ் செய்துகொண்டிருந்தார். பகீர், கபீரினுடைய அன்னையினிடம் சென்று, "அம்மா, கபீர் பாழ் மண்டபத்தில் ஸ்ரீராமா ஸ்ரீராமா என்று கூறிக்கொண்டிருக்கிறுன். அவனிடமிருந்த ஆடையை யாரோ ஒருவன் பிடுங்கிக்கொண்டு போய்விட்டான்" என்று கூறிப் போய்விட்டார்.

இதைக்கேட்டதும் கபீரினுடைய தாயார், கோபங்கொண்டு கையில் ஒரு பிரம்பை எடுத்துக்

கொண்டு வேகமாய்ப்போய் "அடே கபீர்! துணியை என்னசெய்தாய்?"—என்று அதட்டிக்கொண்டே அவர் முதுகில் ஓர் அடி அடித்தார். முதுகில் அடிபட்டதும் கபீர், திடுக்கிட்டெழுந்து கண்ணைவிழித்துப் பார்த்து, ஸ்ரீராம்—ஸ்ரீராம்—என்றார். அப்பொழுது அங்கே பகவான் ஸ்ரீராமர் பிரத்யக்ஷமாய், "கபீர், எம்முடைய பரீக்ஷைக்கு நீ பொறுத்திருந்தாய். ஆதலினால் இனி நாம் உன்னருகிலேயே இருப்போம்" என்று கூறினார். கபீர் ஸ்ரீராமபிரானுடைய தரிசனங்கண்டு ஆநந்தங் கொண்டு ஆடிப்பாடித் துதித்தார். அப்பொழுது ஸ்ரீராமபிரான் மறைந்தார்.

மறையவே கபீரின் தாயார் ஆச்சரியமடைந்து, "மைந்தனே, உன்னால் எனக்கும் ஸ்ரீராமபிரானுடைய தரிசனம் கிடைத்தது. நான் பரிசுத்தமடைந்தேன். என் குலமும் பரிசுத்தமடைந்தது" என்றுகூறிக் கபீரைப் பெருமகிழ்ச்சியுடன் வீட்டிற் கழைத்துச் சென்றாள்.

பின் கபீருக்குக் கல்யாணம் நடந்தது. கல்யாணமான பிறகும் கபீர், தமது தொழிலைக் கவனியாமலேயிருந்தார். எப்போதும் ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம் செய்வதும் சாதுக்களை வரவழைத்து அவர்களுக்குப் போஜனமளித்து அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்று மகிழ்வதுமாயிருந்தார். அவருடைய மனைவியாரும் அவரையே பின்பற்றி அவர் மனங்கோணாமல் நடந்து வந்தார். அப்பால் சில வருஷங்களுக்கெல்லாம் கபீருக்கு ஒரு மகன் பிறந்தான். கபீர் அவனுக்குக் கமால் என்று பெயரிட்டார். கமாலும் ஸ்ரீராம பக்தனானன்.

இப்படியிருக்கையில் சற்குருவைத் தேடியடைந்து அவரிடம் உபதேசம் பெறவேண்டுமென்கிற விருப்பம் கபீருக்குண்டாயிற்று. அதன்மேல் அவர் அந்தக் காசிமா நகரில் சகல சாஸ்திர ஸம்பந்நராகவும் ஸ்ரீராம பக்தராகவும் விளங்கிய ஸ்ரீராமாநந்தர் என்னும் அந்தணச்ரேஷ்டரிடம் போய் வணங்கி, "ஸ்வாமி என்னைச் சிஷ்யனாகக்கொண்டு எனக்கு ஸ்ரீராமதாரக மந்திர உபதேசம் செய்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

ஸ்ரீராமாநந்தர், "முகம்மதியனாகிய இவனை நாம் சிஷ்யனாக ஏற்றுக்கொள்வதாகுமா?" என்றெண்ணிக் கபீரைக் கவனியாமலிருந்து விட்டார். கபீர் அவருடைய மன நிலையை அறிந்து ஒன்றும் பேசாமல் வீடு திரும்பி ஒரு நாள், ஸ்ரீராமாநந்தர் கங்கைக்குச் செல்லும் வழியில் உஷக்காலத்தில் படுத்திருந்தார். ஸ்ரீராமாநந்தர் விடியற்காலத்தில் சூரியோதய மாகுமுன் கங்கைக்கு ஸ்நானம் செய்யப்போவது வழக்கம். ஆகையினால் அவர் அன்று அந்த வேளையில் ஸ்நானத்துக்குச் சென்றார். கபீர் வழியில் படுத்திருந்தமையால் இருட்டில் தெரியாமல் அவர் கபீரின் சிரசின்மேல் காலைவைத்துவிட்டார். வைத்ததும் ஸ்ரீராமா என்று கூறிக்கொண்டே ஸ்ரீராமாநந்தர் அப்பால் சென்றார். கபீர் உடனே பெருமகிழ்ச்சியுடனெழுந்து "அடியேன் உய்ந்தேன்! பாக்யம் பெற்றேன்" என்று கூறிக்கொண்டே சென்று அன்றுமுதல் அவரையே குருவாகக்கொண்டு ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம் செய்வதிலேயே காலங்கழித்து வந்தார்.

ஒரு நாள் கபீர் தமது குரு ஸ்ரீராமாநந்தரைப் பாடிப் பஜனைசெய்துகொண்டே சென்றார். ஸ்ரீராமா

நந்தர் அப்பொழுது அவ்வழியே தமது சிஷ்யர்களு டன் பஜனை செய்துகொண்டு வந்தார். அவர் கபீரின் பக்குவ நிலையைப் பரிசோதிக்க எண்ணி, “அடே கபீர், நீ என்னை குருவென்று சொல்லுகிறாய்? நான் உனக்கு எப்பொது எந்த இடத்தில் உபதேசம் செய்தேன்? ஏன் வீணே பிதற்றிக்கொண்டு அலைகிறாய்?” என்று கேட்டுக் கோபங்கொண்டவர்போல் நடித்து அவர் மீது தமது கால் பாதுகையை எடுத்து விட்டெறிந் தார். அது கபீரின் சிரசின்மேல் பட்டு இரத்தம் வரத் தொடங்கியது.

கபீர், தமது தலையைக் கையில் பொத்திக்கொண்டு சந்தோஷத்துடன் ஸ்ரீராமாநந்தரைப்பார்த்து, “தேவ ரீர் அப்பொழுது கங்கைக்குச் செல்லும் வழியில் உப தேசம் செய்தது இரகஸ்யமாயிருந்தது. இப்பொழுது நான்குபேர் அறியத் தேவரீரின் பாதுகை அடியேன் சிரசின்மீது வைக்கப்பட்டது. ஐந்து பூதங்களையும் சாக்ஷியாகவைத்துத் தேவரீருடைய பாதமலரைப் பிடித்தேன். தேவரீர் செய்த உபதேசத்திற்கு ஸ்ரீ ஹரியே சாக்ஷி” என்றார்.

இதைக்கேட்டதும் ஸ்ரீராமாநந்தர் கிருபை கூர் ந்து கபீரிடம் சென்று அவர் சிரசின் மீது தமது திருக் கரத்தைவைத்து ஆசீர்வாதம்செய்து அவ்விடத்தி லேயே ஸ்ரீராம தாரக மந்திரோபதேசம் செய்தருளி னார். கபீர் அதனால் பரமானந்தமடைந்து குருவை வலம் வந்து வணங்கி, “தன்யனானேன்” என்றுகூறி விடைகொண்டு சென்றார்.

இப்படிக் கபீர் குருநாதரின் திருவருளேயடைந்த பின் இவரிடம் பொருமை கொண்ட துஷ்டர்கள் இவர்க்குப் பல தீங்குகள் செய்தார்கள். ஸ்ரீராமபிரான் அந்தத் தீங்குகளிலிருந்து தம் பக்தராகிய கபீரைக் காப்பாற்றியருளினர். அப்படி அவர் காப்பாற்றப்படவே, துஷ்டர்கள் கபீரை மெய்யான கடவுள் பக்தரென்றுணர்ந்து அவரைச் சரணமடைந்தார்கள். கபீர் அவர்களுக்கெல்லாம் பக்திமார்க்கத்தை உபதேசித்தருளினர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் கபீரின் வீட்டுக்குச் சாதுக்கள் பலர் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு அன்னமிட்டு உபசரிக்க வேண்டிய அவசியம் கபீருக்கு ஏற்பட்டது. கபீர், தமது மனைவியை அழைத்து, "வீட்டில் என்ன சாமான்களிருக்கின்றன? எது இல்லை?" என்று கேட்டார். அந்த அம்மாள் முக்கியமாய் "அரிசியேயில்லை. கோதுமையிருந்தாலாவது சமாளித்துக்கொள்ளலாம். அதுவுமில்லை" என்றுகூறி வேறு சில சாமான்களும் இல்லை என்று கூறினள்.

கபீர் அதன்மேல் தம் மகன் கமாலே அழைத்து இதற்கென்னசெய்யலாம். என்று ஆலோசித்தார். கமால், தந்தையைப்பார்த்து, "இந்த ஊரில் பணக்காரனும் பரமலோபியுமாக இருக்கும் தனபால செட்டியாருடைய வீட்டிற்குப்போய்க் கன்னம்வைத்து வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு வந்து சாதுக்களுடைய சேவையை நடத்தி முடிப்போம். அப்படித் திருடுவதால், சொத்துக்குடைய அந்தலோபியும் சாது ஸேவையின் பயனையடைகிருன். நாம் அவனையும் புண்

யவானுக்குகிறோம். ஆதலால் இதிற் பாதகமில்லை. போவோம்'' என்றான்.

கபீர் அதனைச் சரியென்று ஒப்புக்கொண்டு உடனே மகனுடன் புறப்பட்டுச் செட்டியார் வீட்டுக்குப்போய்க் கன்னம் வைத்தார். கமால் கன்னவாசல் வழியே அவ்விட்டினுள் நுழைந்து வேண்டிய சாமான்களை யெடுத்துக் கபீரிடம் கொடுத்தான். கபீர் போது மான அளவு சாமக்கிரியைகளை அடைந்ததும் கமாலைப் பார்த்து, "கமால், செட்டியாரை எழுப்பிவிட்டு வெளியே வந்துவிடு. அப்படிச் செய்யாவிட்டால் இவ் வழியே வேறு யாரேனும் திருடர் நுழைந்து செட்டி யாருக்குப் பெரிய நஷ்டமுண்டாக்கி விடுவார்கள். நம் மால் அப்படி நஷ்டமேற்படுவது கூடாதன்றோ?'' என்றுகூறினார். உடனே, கமால், செட்டியாரே, "உம் வீட்டில் இரண்டு திருடர் புகுந்து சாமான்களைத் திருடிக்கொண்டு போகிறார்கள். எழுந்திரும்! எழுந்திரும்! என்று கூவிச் செட்டியாரை எழுப்பிவிட்டு வெளியே வரத்துரிதமாகக் கள்ளவாசலில் நுழைந்தான். அதற்குள் செட்டி ஓடிவந்து கமாலுடைய காலைப்பிடித்துக்கொண்டான். கமால், உடனே, "தந்தையே செட்டி என் காலைப் பிடித்துக்கொண்டு விட்டான். நான் வெளியே வரமுடியாது. சற்றுநேரம் இவ்விடமிருந்தால் ஊர் ஜனங்கள் கூடிவிடுவார்கள். பின் நம்மை இவர்கள் திருடர்கள் என்று பிடித்துத் துன்பப்படுத்துவார்கள். அதனால் சாதுக்களுக்கு அன்னமிடுவது கெட்டுவிடும். ஆகையினால் சிறிதும் ஆலோசியாமல் என்னுடைய தலையைக் கத்தியினால் சேதித்துக்

கொண்டுபோய்விடும். இச்சமயத்தில் மாயாமமதைகளை மனத்தில் வைக்கவேண்டாம்'' என்றான்.

கபீர் உடனே கமாலின் தலையை வெட்டிக் கையிலெடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போய் நடந்த செய்தியை மனைவிக்குத் தெரிவித்துக் கமாலின் தலையையும் சாமக்ரியைகளையும் அவளிடம் கொடுத்தார். கபீரின் மனைவி தன்மகனுடைய வெட்டுண்ட தலையைக் கையில் வைத்துக்கொண்டு பெருந்துயரப்பட்டுச் சற்று நேரம் புலம்பினளாயினும் பின் தேறி, கொஞ்சநேரத்தில் சமையல்செய்து சாதுக்களுக்குத் திவ்ய போஜனம் செய்வித்தாள்.

கபீர் அதைக்கண்டு சந்தோஷமடைந்து, "நமக்கு இன்றே சுதினம்! சாதுசேவை நிறைவேறிற்று'' என்றார்.

இங்கு இப்படியிருக்கையில் வர்த்தகன் தன் வீட்டில் திருடன் புகுந்து கொலையும் ஏற்பட்டிருப்பதைப் பற்றி அரசனுக்கு அறிவித்தான். இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் வர்த்தகன் வீட்டிற்கு வந்து விசாரணைசெய்து பார்த்தார்கள். திருடர்கள் இன்னாரென்பதுபற்றி ஒரு துப்பும் அகப்படாமையினால் கமாலின் சரீரத்தை நான்கு தெருக்கள் கூடுமிடத்தில் சூலத்தில் மாட்டி "இது திருடர்களுக்கு விதிக்குந் தண்டனை'' என்று உலகிலுள்ளோர் உணரும்படி செய்தார்கள்.

கபீர் கமாலின் தலையை வெட்டிக்
கொண்டு போதல்.

இப்படி நடந்தபின் கபீர் வீட்டிற்கு வந்திருந்த சாதுக்கள் மற்ருேர் ஊருக்குப்போக அங்கிருந்து புறப் பட்டுச்சென்ருர்கள். கபீரின் மனேவியும் கபீரும் அவர் களே வழியனுப்பக் கூடவே சென்ருர்கள். எல்லோரும் கமாலின் சரீரம் சூலத்தில் இடப்பட்டிருக்கும் இடத் தை நெருங்கிய உடனே சாதுக்கள் அந்தச் சரீரத் தைக்கண்டு அதிசயமடைந்து நின்றனர். அப்பொழுது அச்சரீரம் தன் இரண்டு கரங்களேயும் குவித்துச் சாதுக்களேக் கும்பிட்டது. சாதுக்கள், "இந்த முண் டம் எங்களே இப்படி சேவிப்பதேன்?" என்று வியப்புற் றனர். அப்போது கபீர் நடந்ததை விவரமாகக்கூறினர். சாதுக்கள்கேட்டு வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து உடனே கமாலின் சிரசை வரவழைத்து அதை அந்த முண்டத்தின்மேல் பொருத்தினர்கள். பொருத்தியவள வில் கமால் உயிர்பெற்றெழுந்து ஸ்ரீராமனேத் துதித்து வணங்கிப் பின் சாதுக்களேயும் துதித்தான்; அப்பால் தாய் தந்தையரை வணங்கினன். சாதுக்கள் கபீரை யும் கமாலேயும் புகழ்ந்து ஆசீர்வாதம்செய்து சென்ருர் கள். கபீர் கமாலுடனும் மனேவியுடனும் வீடுசென்று எப்போதும் போல் சாதுசேவைசெய்து கொண்டு சுக மாக வாழ்ந்துவந்தார்.

மனிதர்களே மின்சார சக்தியினல் 130 அடி உயரம் தூக்கி எறியும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எறி யப்படும் மனிதனே வலேயில் பிடித்துக் கீழே இறக்கிவிடுவார் கள். இஃது ஒருவகை விளேயாட்டுக்கருவியாக உபயோகப்பட படலாம்.

முகம்மது நபி சரித்திரம்

உலகத்திலே தற்காலத்திலுள்ள முஸ்லீம்களின் தொகை இருபத்திரண்டு கோடி எனக் கணக்கிட்டிருகின்றனர். அவர்களில் ஏழுகோடி பேர் இந்தியாவில் மாத்திரம் வசிக்கின்றனர். இப்பெருந் தொகையடங்கிய முஸ்லீம்களோடு இந்துக்களும் மனவேறுபாடின்றி ஒத்துழைத்தால் மாத்திரமே நம் நாடு க்ஷேமமுறும். நம் நாட்டு உத்தம தேசபக்தரான தாதாபாய் நௌரோஜி அவர்கள் 1906ஆ கூடிய காங்கிரஸில், இந்துக்களும் முகம்மதியரும் இந்தியாவின் இரண்டு கண்களுக்குச் சமமானவர் என்று கூறியிருக்கின்றனர். இவர்களில் யாருக்கேனும் ஒரு சமூகத்தாருக்குக் கெடுதி நேருமாயின் அது மற்ற சமூகத்தாரையும் பாதிக்கும். ஆகையால் இவ்விரு சமூகத்தாரும் மன மொழி மெய்களில் ஒருமைப்படவேண்டும். இவ்வாறு ஒற்றுமையை நாடும் ஒவ்வொரு ஹிந்துவும் இஸ்லாம் மதத்தின் சிறப்பையும் அதன் ஸ்தாபகரான முகம்மது நபியின் சரித்திரத்தையும் அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

இந்தியாவிற்கு மேற்கே அரேபியா என்கிற ஓர் நாடுளது. அது நீரும் நிழலுமற்ற ஓர் பாலைவனம். ஆதலால் அந்நாடு விவசாயத்திற்குத் தகுதியில்லாமலிருக்கி

றது. அந்நாட்டு ஜனங்களுக்கு அராபியர் என்று பெயர். அவர்கள் மிகவும் முரடர்கள். அவர்கள் ஆங்காங்குள்ள சிறு புல் வெளிகளில் தங்கள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு ஊர் ஊராகத்திரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் சதா மதுபானத்தில் விருப்பமுள்ளவராகவும், ஒருவர்க்கொருவர் சண்டைசெய்துகொண்டு மிருந்தனர். அவர்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தனர்.

அந்நாட்டில் கி.பி. 570-வருஷத்தில் மெக்கா என்னும் ஒரு பட்டணத்தில் அப்துல்லா என்பவருக்கும் அமீனு என்பவளுக்கும் ஒரு தெய்வீகக் குழந்தை அவதரித்தது. அவர் தான் உலகப்பிரசித்தி பெற்ற முகம்மது நபி என்பவர். அவர் பிறப்பதற்குக் கொஞ்சகாலத்திற்கு முன் தமது தந்தையையும் பிறந்த கொஞ்சகாலத்திற்குப் பிறகு தமது தாயையும் இழந்தார். பரிதாபகரமான இந்நிலையில் விடப்பட்ட அநாதையாகிய முகம்மதுவை அவருடைய சுற்றத்தார் அன்புடன் ஆதரித்தனர். அந்நாட்களில் முகம்மது ஆடுமேய்த்து வந்தார். அவர் ஆடுகளை மேய விட்டுவிட்டுத் தமது காலத்தை வீணுக்காமல் அநேக பல அரிய விஷயங்களை ஆலோசித்தறிவதில் செலவிடலாயினர். இதனுல் முகம்மதுவின் மனம் ஒரு நிலைப்பட்டுவரப் பழக்கமடைந்தது.

இவ்வாறு வருஷங்கள் பலசென்றன. முகம்மதுவுக்கும் வயது இருபத்தைந்து ஆயிற்று. அப்பொழுது அவர் செல்வம் மிகுந்துள்ள கடிஜா என்னும் ஓர் விதவையினிடம் கணக்குப்பிள்ளையாக அமர்ந்து தான் ஏற்

றுக்கொண்ட தொழிலைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தார். கடிஜா இவருடைய நற்குண நற்செய்கைகளைக்கண்டு வியந்து அவரையே மணந்து கொண்டாள். அப்பொழுது கடிஜாவுக்கு வயது நாற்பது. அவர்கள் இருவரும் பூவும் மணமும்போல் இல்லற வாழ்க்கையை ஒருமித்த மனதுடன் மிகச்சிறப்பாக நடத்தி வந்தனர். காலக்கிரமத்தில் இவர்களுக்குச் சில குழந்தைகளும் பிறந்தன.

அக்காலத்தில் அராபியர் அனைவரும் முற்கூறியபடி பல தெய்வங்களை வணங்கி வந்தனர். ஒவ்வொரு கிராமத்தாரும் ஒவ்வொரு தெய்வத்தை வணங்கி வந்தனர். அவர்கள் எல்லா தெய்வங்களுக்கும் மேலாக அல்லாவையே சிறந்த தெய்வமாகக் கருதியபோதிலும் அல்லாவையே அநேகமாக மறந்து விட்டனர். ஆகையால் இவர்களுடைய தெய்வ வழிபாடு முகம்மதுவுக்கு வெறுப்பையுண்டாக்கிற்று. இதன் இரகசியத்தை இலகுவில் அறியமாட்டாமல் முகம்மது தனியாக அடிக்கடி ஆலோசனைசெய்து வரலாயினர். இவ்வாறு பல வருஷங்கள் சென்றன. முகமதுவுக்கும் வயது நாற்பதாயிற்று.

ஒரு நாள் முகம்மது ஹீரா என்னும் மலைக்குகையில் ஏதோ தனியாக ஓர் யோசனையிலிருக்கையில் உறங்கிவிட்டார். அவருடைய தூக்கத்தில் அவருக்கு முன் ஓர் தெய்வாம்சம் ஓர் ஓலையைக் கையிலேந்திக் கொண்டு நின்றது. அது முகம்மதுவை விளித்து அவ்

வோலைச் சுருளிலுள்ள விஷயங்களை வாசிக்குமாறு கட்டளையிட்டது. முகம்மது அதை வாசிக்கமாட்டாமல் திகைத்தார். பலமுறை அத்தெய்வாம்சம் அவரை வற்புறுத்தவ அவ்வோலைச்சுருளை வாங்கி அவர் வாசித்தார். அதில் கடவுள் ஒன்று என்றும் அதையாவரும் வழிபடவேண்டுமென்றும், முடிவில் யாவரும் கடவுளையே வந்தடைய வேண்டுமென்றும் வரையப்பட்டிருந்தது. முகம்மது உடனே துயில் நீங்கிக் கண் விழித்துக்கொண்டு தனக்கு முன் தோன்றியவர் இன்னாரென அறிந்து கொள்ளமாட்டாமல் வருத்தப்பட்டார். அவருடைய ஜீவிய காலத்தில் இவ்விதக் காட்சிகள் அவருக்குப் பலமுறை புலனாயின. இக்காட்சிகள் எல்லாவற்றையும் அவர் கடவுளினுடைய கட்டளையென மதித்துத் தம்கொள்கைகளைப் போதிக்குமாறு கடவுள் தம்மைக் கட்டளையிடுகின்றனரெனத் தெளிந்தார். அது முதற்கொண்டு முகம்மது கீழ்கண்ட தம் கொள்கைகளைப் பரவச் செய்யலாயினர்.

எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தழிக்கும் தெய்வம் ஒன்று. அத்தெய்வத்தின் கட்டளைப் பிரகாரம் ஒழுகும் மதத்தினரே இஸ்லாம் மதத்தினர். இக்கொள்கைகளைப் பின்பற்றி நடப்பவரே முஸ்லீம். முஸ்லீம் யாவரும் சகோதரர். விக்கிரகவணக்கம் கூடாது. அவர்கள் 'யாவரும் புண்ணியகாரியங்களைச்செய்தும் பாபகாரியங்களை நீக்கவும் வேண்டும். காலத்தை வீணாகச் செலவிடாமல் ஜெபதபங்களிற் செலவழிக்கவேண்டும்

கடன்கொடுப்பவர் தாம் கொடுக்கும் கடனுக்கு வட்டி வாங்கலாகாது.[1] ஒருவன் நான்கு மனைவிகளுக்குள்ளாக தன் வருமானத்திற்கேற்றவாறு மனைவிகளை மணந்து கொள்ளலாம். புருஷன் தன் மனைவிகளிடத்தில் பக்ஷபாதமில்லாதபடி ஒரேவித அன்பை யுடைத்தாயிருக்க வேண்டும். அதிக மனைவிகளை மணந்து ஆதரிக்க ஆற்றலற்றவன் ஒரே மனைவியுடன் வாழவேண்டும். மது பானம் செய்யக்கூடாது. சுத்தநீரே பானத்திற்கேற்றது

முகம்மது மேற்கூறிய போதனைகளை மெக்காவில் போதித்து வரத்தலைப்பட்டனர். முதலில் இவருடைய போதனைகளை இருவருடைய குடும்பத்தவரும் சுற்றத்தாருமே ஆதரித்தனர். மற்றவர்யாவரும் இவருடைய கொள்கைகளை வெறுத்து இவர்மீது கல்லை எறிந்தும் சுடுசாம்பலைக்கொட்டியும் தீங்கிழைக்கலாயினர். இவர்களுடைய தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் முகம்மது கி. பி. 622-ல் மெக்காவைவிட்டு மெடினாவுக்கு ஓடிவிட்டார். இத்தினம் முதற்கொண்டே முகம்மதியர் தம் வருஷங்களைக் கணக்கிட்டு வருகின்றனர். இதற்கு ஹிஜிரா எனப்பெயர்.

மெடினாவுக்குச் சென்ற முகம்மது அங்கும் தம்முடைய கொள்கைகளைப் போதித்துவரலாயினர். மெடினாவிலுள்ள ஜனங்கள் மெக்கா ஜனங்களைப்போலன்றி யாவரும் முகம்மதுவின் கொள்கைகளைச் சரியெனக் கருதி ஆதரித்தனர். அவர்கள் யாவரும் இவருடைய

1 முகம்மது ஏகபத்தினி விரதராகவே இருந்தனர்.

நூதனமதத்தைச் சார்ந்தனர். கி. பி. 630-வது வருஷத்தில் முகம்மது மெடினுவிலிருந்து ஓர் பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டுபோய் மெக்காவைச் ஜெயித்து தம் ஆட்சியையும் மதத்தையும் ஸ்தாபித்தனர்.

முகம்மதுவினுடைய பிரசாரத்தினுல் முஸ்லீம்களுக்குள் பரஸ்பர அன்பும், தெய்வம் ஒன்றேயென்னும் கொள்கையும், சகோதரத்துவமும், தெய்வத்திற்குப் பலியிடுவதின் தீமையும், மதுபானத்தின் தீமையும், பலதாரவிவாகத்தின் தீமையும் விளக்கப்பட்டன. அநாகரிகமாயிருந்த அராபியர் யாவரும் நாகரிகமடைந்தனர்.

இஸ்லாம் மதத்தினர் அவசியமாகப்பற்றி நடக்க வேண்டிய விதிகள் யாதெனில், (1) ஓரே கடவுள் என்று நம்பிவணங்கல், (2) ஒவ்வொருநாளும் ஐந்து முறை மெக்கா இருக்கும் திக்குநோக்கித் தெய்வப்பிரார்த்தனை செய்தல் (3) ஏழைகளுக்கும் அங்கஹீனர்களுக்கும் தங்களாலியன்ற அளவு தானதர்மங்களைச் செய்தல் (4) ரம்சான் மாதத்தில் பகற்காலத்தில் தண்ணீரையும் நீக்கி உபவாசமிருத்தல், (5) தம்ஜீவிய காலத்தில் ஒரு முறையாவது மெக்காவுக்கு யாத்திரை செய்தல் முதலியனவாம்.

முகம்மது கி. பி. 632-ம் ஆண்டு ஜூன்மீ 8௳ தேகவியோகமானுர்.

இச்சரிதையை உணர்ந்த நாம் மதத்திற்காகப் போர் புரிவது மதத்தின் சாராம்ஸம் அல்ல என்ப

தை மேற்கொண்டு சகோதர நேசம் பரவும்படி வாழ வேண்டும். நம்தேசத்தில் தென்கலை வடகலை சண்டை சைவவைஷ்ணவச் சண்டை முதலியயாவும் போலி மதப்பற்றுலேயே உண்டாகின்றன. முடிவில் ஒவ்வொருவரும் தம்முடைய மதத்திற்காக மிகவும் வைராக்கியம்கொண்டு போர்புரியாமல் நாட்டில் ஒற்றுமை நிலவும் வழியையே நாடவேண்டுமென வறிக.

T. R. சுப்ரமண்யன்.

லண்டன் காட்சிச் சாலையில் சமீபத்தில் இறந்த தீப்பறவையின் வயிற்றில் பின் வரும் சாமான்கள் அகப்பட்டன:— மூன்று கையுறைகள், மூன்றடி நீளக்கயிறு, மூன்று கைக்குட்டைகள், 4 அறைப் பென்னி நாணயங்கள், இரண்டு பார்த்திங் நாணயங்கள், ஒரு பிரஞ்சு நாணயம், ஒரு திறவுகோல், நாலு அங்குல மரக்குச்சி ஒன்று, நாலங்குலப் பென்சில் ஒன்று ஒரு சீப்பின் பகுதி, தங்கமுலாம் பூசிய கண்டஹாரத்தின் பகுதி ஒன்று, தந்திக்கம்பித் துண்டுகள் 12, திருகாணிகள், சிறு ஆணிகள் நாலங்குல ஆணி இரண்டு, கப்பிக்கல், செமன்ட் துண்டுகள் முதலியன. இவ்வளவு நயமான உணவுப் பொருள்களுக்குள் நாலங்குல ஆணி ஒன்று வயிற்றில் பொத்துக்கொண்டதே அதன் மரணத்துக்குக் காரணமாம்.

டாரண்டோவில் உலக முழுவதுக்கும் பொதுவான நீந்தற் பந்தயம் நடக்கப்போகிறது. இப்பந்தயத்தில் முழங்காலுக்குக் கீழ் இரண்டுகாலும் இழந்த முடவன் ஒருவனும் போட்டியிடப் போகிறானாம். இவன் அண்டோரியாவைச் சேர்ந்த ஜார்ஜ் காம்ப்ஸ் என்னும் இளைஞன்.

கோபமாகாது

துருவன் ஒரு சமயம் யக்ஷர்களிடம் கோபங் கொண்டான். அதுகண்ட ஸ்வயம்பு மநு அவனை அழைத்து—

குழந்தாய், கோபத்தைத் தணித்துக்கொள். நல்ல ஒழுக்கமுடையவர்களுக்குக் கோபம் சிறிதும் தகாததாகும். கோபத்தைக்கண்டால் நல்லவர்கள் வெறுப்பார்கள்; இகழ்வார்கள். அறிவீனனே நல்லவர்கட்கு விரோதமான செய்கையைச் செய்வான். இது குலத்திற்கு யோக்கியமானதன்று. பெரியோர்களிடத்திலே பொறுமையையும் நல்லோரிடத்திலே நயமும் தாழ்ந்தவரிடத்தில் தயையும் சமமானவரிடத்தில் நட்பும் ஏனைய உயிர்வர்க்கங்களிடத்திலெல்லாம் சமமான எண்ணமும் கொள்கின்றவர்களுக்கே ஈசன் கருணையுண்டாகும். ஆதலால் இதைவிட்டுவிடு. ஆறுவதுசினம் என்று போதிக்கிறார்களே பெரியோர். நல்லொழுக்கமுடையவர்கள் அற்பகாரியத்திற்காக எல்லோரிடமும் கோபங்கொள்ளமாட்டார்கள். சினத்தை அடக்க அசக்தனாயிருப்பவனைப் பேதையருள் சேர்ப்பர் அறிஞர். அவனிடம் இரக்கங்கொள்வது நியாயமென்பர். ஏனெனில் அவன் பலவீனனென்பதிற் சிறிதும் ஐயமில்லை. பலவீனனுக்கே கோபம் முன்னிற்கும். கோபத்தினாலே நன்மை தீமையுணரும் சக்தி மறையும். ஆதலால் கோபங்கொள்வது கூடாது. அதனால் அளவிறந்த அநர்த்தங்கள் விளையும். கோபத்திற்கு இடந்தராமல் தடுக்கும் குணமே குணமாகும். வியாதிக்கு ஔஷதம் கொடுத்து அடக்குவதுபோல் அதனை விவேகம் என்னும் மருந்தினால் அடக்கவேண்டும். ரோஷமுடையவரைக் கண்டால் உலகம் நடுங்கும் ஆகையினால் கோபத்தை விடக்கடவாய்—என்றார்.

"தீராக்கோபம் போராய்" முடியும் "கொன்றைவேந்தன்".

நரகாசுரன் கதை

துவாபரயுகத்தில் இப்பாரதகண்டத்தில் காமரூப தேசத்தில் பிராக்சோதிஷம் அல்லது மாகிஷ்மதி என்ற பெயர் வகித்த ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தை நரகாசுரன் என்னும் இராக்ஷஸன் ஏக சக்ராதிபதியாய் ஆண்டுகொண்டிருந்தான். அவன் இந்திராதி தேவர்களையும், மனிதர்களையும், மற்ற ஜீவ ராசிகளையும் இம்சித்து அநேகவிதமான கொடுந் துன்பங்களைச் செய்துவந்தான். ஆகையால், அவனுடைய கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் தேவர்களும், நரர்களும், ஸ்ரீ விஷ்ணு பகவானிடத்தில் முறையிட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் கருணாகர மூர்த்தியாகிய பகவான் அடியார்களுடைய வேண்டுகோளுக்கிரங்கியும், தான் சிருஷ்டித்த ஜீவராசிகளை இம்சிக்கிறான் என்கிற கோபத்தினாலும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாக அவதாரஞ்செய்து நரகாசுரனை ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முன்னாள் சதுர்த்தசியன்று பலவிதமாக வதைத்துக்கொன்று தேவர்கள் உள்பட சகல ஜீவராசிகளையும் மீட்டு இரக்ஷித்தார். இந்தத் துஷ்டன் ஒழிந்தான் என்கிற சந்தோஷத்தை வெளிப்படுத்தும் பொருட்டு அன்றையதினம் அனைவரும் விடியற்காலம் 5—மணிக்கெல்லாம் ஸ்நானம்செய்து, பலகார வகைகள் செய்து தங்கள் மனைவி மக்கள் சகிதம் சாப்பிட்டு

ஆனந்தமடைந்தார்கள். இருளாகிய பாவம் நீங்கியதாலும், நரகாசுரன் ஒழிந்ததாலும், கடவுள் அருள் என்னும் வெளிச்சத்தில் வசிப்பவர்க்கு இனிப்பயமில்லை என்பதற்கு அறிகுறியாக அநேக விளக்குகளைத் தங்கள் வீடுகளில் வரிசை வரிசையாக ஏற்றி வைத்தார்கள். தீபங்களை இவ்விதமாய் ஏற்றி வைத்ததனால்தான் இதற்குத் "தீபாவளி'' எனப்பெயர் வந்தது. எதனால் "கொடும்பாவி,'' "துன்மார்க்கன்'' என்ற பெயர்கள் அவனுக்கு வழங்கப்பட்டனவோ அவைகளை நாம் செய்யாதிருக்கவும், நற்காரியங்களில் ஈடுபட்டு நன்மையையடையவும் பிரதி வருஷமும் இந்த நாள் ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதுதான் ஆதியிலிருந்து உண்மையாக அனுசரித்து வந்ததும் இனிமேலும் அனுசரிக்க வேண்டியதுமான முறை. தெரியாத்தனத்தால் நம் ஜனங்கள் நாளடைவில் ஆடு கோழிகளைக் கொலைசெய்து அவற்றின் ஊனைப் புசிக்கத் தொடங்கினர். புண்ணிய காரியங்களைச் செய்ய வழிகாட்டியாயுள்ள இந்த தினத்திலுங்கூட மஹாபாதகமாகிய கொலைப் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறோமே என்று சிறிதேனும் வருந்தாமல் களித்து நிற்பது ஐயோ, என்ன மடமை!

2. நோன்பென்பது கொன்று தின்னுமையாகும். முன் தினத்தில் தின்ற ஆட்டுக்கறியும் கோழிக்கறியும் வயிற்றில் கிடக்க கேதார கௌரி விரதத்தை நீங்கள் எப்படி கிரமப்படி ஆசாரக் குறைவில்லாமல் அனுஷ்டிக்க முடியும்?

3. கடவுளுக்குச் சகல ஜீவன்களும் சமதையாகும். கோழியும் ஆடும் முருகக்கடவுளுக்குக் கொடி

யாகவும் வாகனமாகவும் இருப்பது உங்களுக்குத் தெரியாதா? அவற்றைக்கொன்று தின்பதால் இக் கலியுக தெய்வமாகிய அக்கடவுளுக்கு எவ்வளவு கோபம் உண்டாகும்!

4. "அஹிம்சா பரமோதர்மஹ" என்பதுவேதம். மனச்சாட்சிக்கும் தெய்வத்திற்கும் வேதத்திற்கும் விரோதமான காரியத்தைச் செய்துகொண்டிருக்கையில் தெய்வத்தை ஏமாற்றி உங்கள் நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

5. நாம் ஜன்மம் எடுத்ததன் நோக்கம் பூமியில் பரோபகாரியாகவும் ஒரு தேவன் போலவும் வாழ்வதற்கேயன்றி, நாக்கின் ருசிக்காகவும் வயிற்றின் வெறிக்காகவும் வாயில்லாத பலமில்லாத ஜெந்துக்களைக் கொன்றுதின்று எமனுகத் திரிவதற்கு அன்று.

6. சகோதரர்களே, சகோதரிகளே, தாய்மார்களே! மாமிச உணவை அன்னிய பதார்த்தமென்று அழைக்கிறீர்களே! அம்மாதிரியான பெயர் ஏன் அதற்கு அமைந்தது என்பதைச் சற்று யோசியுங்கள். அவ்வுணவை விசேஷ தினங்களிலும் அமாவாசை ஷஷ்டி கிருத்திகை முதலிய தினங்களிலும் புசியாமலிருப்பதன் பொருளை இன்னும் நீங்கள் உணரவில்லையா? நமது மதத்திற்கும் தெய்வத்திற்கும் ஆசாரத்திற்கும் ஏற்ற உணவு மரக்கறி உணவுதான் என்பது அவற்ருல் தெளிவாக வில்லையா?

7. மாமிசபோஜனம் ஒருவகையிலும் உமக்கு நன்மை செய்வதல்ல. மரக்கறி உணவே எல்லா வகை

யிலும் நன்மை தருவதாகும். விவரமாகப் படிக்கவேண்டுமானுல் எமக்கு எழுதுங்கள். சிறு புத்தகங்களை இனுமாக அனுப்புகிறேம்.

குடித்துக்கெட வேண்டாம்.

குடியே நரகம்; குடியே அவமானம்; குடியே அழிவு, குடியே குடும்பநாசம்; குடியே தரித்திரம். இப்படிப்பட்ட குடிப்பேயையா தீபாவளியன்று கொண்டாடப் போகிறீர்கள்? உடனே இப்பேயை வீட்டைவிட்டுத் துரத்துங்கள்? இந்த நாசமான குடியிலா ஆனந்தமிருக்கிறது? ஒருகாலுமில்லை. ஆகையால், தீபாவளியன்று மது மாமிசம்விட்டுப் பகவந் நாமத்தை உச்சரித்து ஆநந்த மடையுங்கள். கடவுள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் நல்ல கதியைக் கொடுப்பார். இனியாவது பாவத்திற்கேதுவான குடியையும் மாமிசத்தையும் விட்டுவிட்டுக் கடவுளின் அருளைப் பெறுங்கள்.

தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரகசபை,
436, தங்கசாலை வீதி, சென்னை.

ஜெர்மனியில் இரசாயனப் புகையிலை கண்டுபிடித்திருக்கிறர்களாம். அம்முறைப்படி தயாரித்த புகையிலைச் சத்து ஏற்றிய காகிதங்களைக் கொண்டே சுருட்டு செய்கிறர்களாம் இச்சுருட்டுக்கும் அசல் புகையிலைச் சுருட்டுக்கும் வேற்றுமை தெரிவதில்லையாம்,

லக்ஷ்மணனுடைய கோபம்

ரிசியமுக பர்வதத்தில் ஸ்ரீராம லக்ஷமணர்கள்
வசித்திருக்கின்றனர்.

பர்வதத்தின் கண் ஒருபுறம் வீற்றிருந்த ஸ்ரீராமர் கார்காலம் கழிந்து சரத்காலம் வந்ததை அறிந்து தமக்குள் சிந்திக்கின்றார்.

ஸ்ரீராமர்:—(தமக்குள்) நல்லகாலம் வந்து விட்டது! (உயரநோக்கி) வானம் பெரியோருடைய மனம் போல் நிர்மலமாயிருக்கிறது. சந்திரன் களங்கமற்றுப் பதிவ்ரதைகளின் முகம்போல் ப்ரகாசிக்கின்றான். சாரஸ பக்ஷிகளின் தொனி எங்குங் கேட்கின்றது. மேகங்களெல்லாம் மதமழிந்த யானைகளைப்போலடங்கி விட்டன. மழைக்காற்று, சீறியாடும் பாம்பு, மந்திரவாதியினிடம் அடங்குவதுபோல் அடங்கி யிருக்கின்றது. ஓ இப்படி மழைக்காலம் நீங்கி சரத்காலம் வந்ததும் ஸுக்ரீவனைக் காணோமே! அவனுடைய கார்யமாய் விட்டதல்லவா?

[தலைகுனிந்து யோசிக்கின்றார்.]

லக்ஷ்மணர் ஒருபுறமாக வருகின்றார்.

(தமக்குள்)

லக்ஷ்மணர்:—(பார்த்து) என்ன ஆலோசனை? தேவியை யெண்ணிக் கவலைப்படுகின்றார் போலும்!

கஷ்டம் வந்தபோது கவலைக்குள்ளாவது மதியாகுமா? (அருகில்சென்று) அண்ணு, என்ன யோசனை? உமது ஆண்மைக்கு இது அழகா? மன ஒருமை கெட்டிருக்கிறது போலும்! தைர்யத்தையும் உற்சாகத்தையுமிழந்து வீண் கலக்கமடைவதனுல் யாது பயன்? காரியத்தைச் சாதிக்க ப்ரயத்தனமும் கலக்க மின்மையும் மகிழ்ச்சியும் உபாயமும் தேவதாப்ரார்த்தனையுமல்லவா வேண்டும்?—

ஸ்ரீராமர்:—லக்ஷ்மணு! வா, நீ சொல்வது நியாயமே! தொடங்கிய காரியத்தை நடுவில் மறந்து விடுவதும் அதன் பயனைப்பற்றிச் சிந்திப்பதும் கூடாதென்பது தெரியும். ஆயினும்—

[விசனப்படுகின்ருர்.

லக்ஷ்மணர்:—கலங்கவேண்டாம். தேவியார் (ஸீதை) பிறரால் அடையத்தக்க எளியவராகார்! எரியும் நெருப்பை அடைய எவரால் முடியும்?

ஸ்ரீராமர்:—லக்ஷ்மணு! என்ன சொல்வேன் நான். சரத்காலம் வந்தும் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவேண்டு மென்கிற எண்ணமில்லாமலிருக்கும் ஸுக்ரீவனைக் கவனித்தாயா? அவன் நம்பொருட்டு ஒரு ப்ரயத்தினமும் செய்யவில்லை போற் காண்கிறது. (பெருமூச்சோடு) ஸீதையைக் காணுமல் சிந்தாக்ராந்தனுய் இந்த நான்கு மாதமும் கழித்தாயிற்று. மனைவியையிழந்து தவிப்பவனுகிய என்னிடத்தில் ஸுக்ரீவனுக்கு இன்னும் இரக்கம் வரவில்லைபோலிருக்கிறது.

செய்தநன்றியை மறந்த இந்தத் துராத்மாவை நாம் என்ன தான் செய்யலாகாது! (லக்ஷ்மணருக்குக் கோபமுண்டாகிறது) ஒன்றைச்செய்கின்றேன் என்று ஒருவர்க்கு வாக்களித்துப் பிறகு மோசஞ்செய்கிறவனை விட அதமன் வேறுண்டா? தம்பி! இந்தத் துரகங்காரி நன்றி மறந்தபாதகன். மின்னற்கூட்டம்போல் என்னுடைய வில்லிலிருந்து தோன்றும் அஸ்திர சொரூபத்தைப் பார்க்கவிரும்புகின்றான் போலும்! நிகரற்ற பராக்ரமசாலியாகிய நீ என்னுடனிருப்பதையும் இவன் எண்ணவில்லை யென்று தெரிகிறது. நமது வன்மையறியாதவனா இவன்? என்ன தைர்யம் பார்த்தாயா? நீ கிஷ்கிந்தைக்குச் சென்று எனது கோபத்தை அவனுக்குத் தெரிவி. நயத்திலும் பயத்திலும் சொல்லு.

லக்ஷ்மணர்:—அண்ணா! ஸுக்ரீவன் தர்மத்தை மறந்திருக்கின்றான் என்பது நிச்சயம். தான் வாழ்வையடைந்த தெப்படி என்பதை அவன் சிந்திக்கவில்லை. இந்த நன்றிகெட்டவன் என்கை அம்பிற்கு ஏன் இரையாகக்கூடாது? இப்பொழுது எனக்கு அடக்கமுடியாத கோபமுண்டாகிறது. (கோபத்துடன்) பொய்சொன்ன அந்தத் துராத்மாவை இப்போதே வதைக்கின்றேன்.

(விலகிப்போய் வில்லுடன்
வெளியே வருகின்றார்.)

ஸ்ரீராமர்:—லக்ஷ்மணா! கோபியாதே! உலகத்தில் உன்னைப்போன்றவர்கள் கொள்ளத்தக்க தன்று இந்தக்கோபம். அவன் எப்படியிருப்பினும் அவனை நாம்

மித்ரனுகக் கொண்டோமல்லவா? கோபம் வந்தபோது அதனைப்பொறுமையுடன் அடக்குகின்றவனே புருஷ ச்ரேஷ்டனுவன்! ஆதலின் கோபத்தை அடக்கு! கெட்டசொல் சொல்லாதே! இனியசொல்லுக்கே உலகம் வசப்படும். அதுவே வெற்றிதரும். நிதானத்துடன் சென்றுவா.

லக்ஷ்மணர்:—(கோபந்தணிந்து தமக்குள்) நியாயம் (ப்ரகாசமாய்) அண்ணு! உத்தரவு.

(கை கூப்புகின்றுர் ஸ்ரீராமர் விடைதருகின்றுர்.)

லக்ஷ்மணர் ஸ்ரீராமஸ்மரணையுடன் செல்லுகின்றுர்.

இடம்:—ஸுக்ரீவனுடைய அந்தப்புரம்.

ஸுக்ரீவன், அந்தப்புரத்தில் ஹம்ஸதூளிகா மஞ்சத்தில், தாரை, உருமை என்னும் இருமனைவியர் அருகிலிருக்க, மதுவுண்ட மயக்கத்தொடு எழுந்து உட்கார்ந்திருக்கின்றுன். அவன் முன் கைகுவித்தபடி அங்கதன் முதலிய வானரர் நின்று லக்ஷ்மணர் வந்திருக்கின்றுர் என்று தெரிவிக்கின்றனர்.

அங்கதன்:—தர்மார்த்த சொரூபங்களைத் தெரிவிப்பதற்காக லக்ஷ்மணர் வந்திருக்கின்றுர். ப்ரதிஞ்ஞை தவருதவராகிய ராமலக்ஷ்மணர்கள் யாவர்? நமக்கு மித்திரரல்லவா? அவ்விருவரில் ஒருவராகிய லக்ஷ்மணர் கையில் வில்லை யேந்திக்கொண்டு வீராவேசத்துடன் வந்து நிற்கின்றுர். வீரராகிய அவரு

டைய கண்கள் சிவந்திருக்கின்றன. வானரர்களை எரிப்பவர்போல் பார்க்கின்றார் அவர். மாயமாயிருக்கிறது. எழுந்துபோய் அவரை வணங்கி வரவேற்றுச் சாந்தப் படுத்திச் செய்யத்தக்கதைச் செய்தல் நலம் !

ஸுக்ரீவன்:—(ஆலோசித்து) தனக்குள்—கோபமேன்! காரணம்—(ப்ரகாசமாய்) நான் ஒருபோதும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு மறந்தும் தீங்கு நினைத்த தில்லையே! எனக்குக் கெடுதிசெய்ய எண்ணி வேறெவரேனும் என் மீது அவரிடம் தவறுகூறி யிருப்பார்களோ? காரணம் யாதெனப் புலப்படவில்லையே! மிகவும் வருத்தமாயிருக்கிறது ! (யோசிக்கின்றான்.)

மாருதி ப்ரவேசித்து ஒரு பக்கமாய் நின்று கேட்கின்றார்.

ஸுக்ரீவன்:—என் ப்ராண ஸ்நேகிதர்கள் இப்படிக் கோபிக்கக் காரணமென்ன? உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?

மாருதி:—(தமக்குள்) காரணந்தெரியாமல் கலங்குகின்றார் அரசர். முன்னேசென்று விளக்குகின்றேன் (முன்போய் வணங்கி நின்று) வேந்தே! ஸ்ரீராமர் உமது பகையை யொழித்து உமக்கு ஸம்பத்தைக் கொடுத்தார். நீர் அவர்க்கு உதவிசெய்வதாக வாக்களித்தீர் ! கார்காலம் போய் சரத்காலம் வந்தும் அந்த நினைவு உமக்குண்டாகவில்லை. நீர் மெய்மறந்தவராயிருக்கின்றீர் ! அதனால் ஸ்ரீராமர் கோபங்கொண்டு லக்ஷ்மணரை அனுப்பியிருக்கின்றார் ! அவர்களு

டைய வல்லமையை நீர் அறியாதவரா? உபகாரம் பெற்ற நாம் அவரைச்சாந்தப் படுத்துவதுதான் நல்லது! அதனால் நமக்குக் குறைவில்லை. விரைவில் எழுந்துபோய் லக்ஷ்மணரை வணங்கி வரவேற்றுச் சொன்ன வாக்கை நிறைவேற்றும்.

ஸுக்ரீவன்:—(மயக்கந்தெளிந்து) என்னையிது! உண்மையில் நாம் தவறு செய்துவிட்டோம். சொன்ன வாக்கை மறக்கலாமா?— (யோசிக்கின்றான்)

லக்ஷ்மணர் ப்ரவேசித்து ஒரு புறமாய் நின்று கவனிக்கின்றார்.

லக்ஷ்மணர்:—ஓ! இதுதான் ஸுக்ரீவனுடைய அந்தப்புரம்! ஸ்திரீகளுடைய ஆடல் பாடல்கள் கேட்கின்றன. உள்ளேசெல்ல மனம் வெட்கப்படுகிறது. ஸ்திரீகள் நிறைந்திருக்கு மிடமல்லவா? இது வேறு தடையா நமக்கு? நமது வருகையை அங்கதன் முதலியவர்கள் சொல்லியும் ஸுக்ரீவன் வரவில்லை. அவன் மது மயக்கத்திலிருக்கின்றான் போலும்! என்ன இது! (கோபங்கொண்டு) சை!--வில்லைக் கீழேயூன்றி நாணையிழுத்து டங்கார சத்தஞ்செய்து உயரப்பார்த்து உதட்டை மடித்துக் கோபத்தோடு ஒருபுறம்போய் நிற்கின்றார்.

ஸுக்ரீவன்:—டங்கார சப்தங்கேட்டதும் திடுக்கிடுகின்றான். யாவரும் பிரமிக்கின்றனர். ஸுக்ரீவன் படுக்கையை விட்டெழுந்து நின்று யோசித்து லக்ஷ்மணர் வந்து விட்டார். வந்து விட்டார்! அவருடைய வில்லின் நாணொலி கேட்கின்றது. என்னசெய்வது (யோசித்து அருகிலிருக்குந் தாரையை நோக்கி) கண்

மணி! லக்ஷ்மணர் நல்லவர். அவர் கோபங்கொண்டிருக்கிற இச்சமயம் நான் அவர் முன் போவதைவிட நீ போய் அவரைச் சாந்தப்படுத்துவது நல்லது! ஸ்திரீகளிடம் அவர் கோபங்கொள்ளமாட்டார். சத்புருஷரல்லவா அவர்? அவர் சாந்தமடைந்த பின் நான் வருகின்றேன்.

தாரை:—(யோசித்து) நல்லது! அப்படியே! அவர் எங்கிருக்கின்றார்? போவோம். புறப்படுகின்றாள்.

தாரை சில தாதிகளோடு
லக்ஷ்மணரைக் காண வருகின்றாள்.

லக்ஷ்மணர் (பார்த்து) ஓ ஸ்திரீ தரிசனம்! (ஒரு பக்கமாய் ஒதுங்குகின்றார்.)

தாரை:—(வந்து வணங்கி) ப்ரபுவே! இது கோபித்தற்குரிய காலமன்று! அன்றி உற்றாரிடமா கோபிப்பது? வீரரே! குற்றம் பொறுத்தருளவேண்டும். காலதாமதமானதையும், நீங்கள் செய்த நன்றியையும் அதற்கு யாது கைம்மாறு செய்யவேண்டுமென்பதையும் நானறிவேன்! உங்கள் பொருட்டுப் பெரும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. கோபந்தணிந்து உள்ளே வந்து கிருபைசெய்யவேண்டும்.

(லக்ஷ்மணர் வாய்பேசாமல்
உள்ளே செல்கின்றார்)

தாரை அழைத்துச் செல்ல லக்ஷ்மணர் பிரவேசிக்கின்றார்.

ஸுக்ரீவன்.—(கண்டதும்) எழுந்து கைகூப்பிக் கொண்டு நிற்கின்றார்.

லக்ஷ்மணர்:—(கோபத்துடன்) நன்றியறிந்தவனும் உண்மை பேசுபவனுமாகிய வேந்தனுக்கே உலகத்

திற் சிறப்புண்டு. அறத்தையும் பிறர் செய்த நன்றியையும் மறந்த அரசனிலும் கொடியவன் யாவனுளன்? பொய் ப்ரதிஞ்ஞை செய்தவனுக்கு உய்யும் வழியுண்டோ? அன்றி நன்றி கொன்றவனுக்குத்தான் உய்யும் வழியுண்டோ? உன்னிடம் இந்தக் குற்றமெல்லாமிருக்கின்றன? நீயேன் இந்தப்பழிப்புக்கு ஆளாயினை? தவளைக்குரலுடைய ஸர்ப்பமென்றுன்னை ஸ்ரீராமர் அறியாமற் போய்விட்டார். ஸ்ரீராமருடைய கோபக் கணைக்கு ஆளானல் நீ தப்புவாயா? உன் சுகந்தானே உனக்குப் பெரிதாய்விட்டது!

(ஸுக்ரீவன் வாய்பேசாமலிருக்கின்றான்.)

தாரை:—ப்ரபுவே! க்ருபாநிதியே! மன்னிக்க வேண்டும்! குற்றம் பொறுத்தாலன்றி எங்கட்கு உய்யும் வழியில்லை. நாங்கள் சிறியோம்! இனி அவர் காரியத்தில், கண்ணுயிருப்பார். வானரசேனைகள் வந்துவிடும்! உடன் ஆகவேண்டியதைக் கவனிப்பார், நன்றியை மறக்கமாட்டார். பெரியோருடைய நட்பை இழக்கத் துணியார்! பொறுத்தருளல் வேண்டும். அருட்பெருங்கடலே! கோபந்தணிந்து எங்களை உய்விக்க வேண்டும்.

லக்ஷுமணர்:—(கோபந்தணிந்த முகத்துடன்) ஸுக்ரீவ! ஸ்ரீராமரும் யானும் உன்மீது கருணையுடையவர்களென்பதில் நீ சிறிதுஞ் சந்தேகம் கொள்ள வேண்டாம். முடிக்கவேண்டிய காரியத்தில் முனைந்து நிற்கவேண்டாமா? ப்ரதிக்ஞைப்படி நீ நடக்கவேண்டாமா?

ஸுக்ரீவன்:—மன்னிக்கவேண்டுஞ் சிறியனை! குற்றமுணர்ந்தேன்! இனித்தாமத மிராது.

———

பீஷ்மர்

(362-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி பீஷ்மர் சேனாதிபதியாக அமர்ந்த பின் சேனைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. பாண்டவர்களுடைய சேனைகளும் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. யுத்தபேரிகை தாம் தாம் என்று முழங்கியது. படைவீரர்கள் அவரவருடைய வல்லமைக்குத் தக்கவாறு போட்டி போட்டுக்கொண்டு எதிர்க்கத் தொடங்கினர்.

இச்சமயத்தில் தரும புத்திரர் தம்முடைய கவச முதலியவைகளைக் கழற்றிவைத்து விட்டு இரதத்திலிருந்து இறங்கி வேகமாகப் பகைவரின் சேனைக்குள் சென்றார். அதைக்கண்டு "இவர் ஏன் இப்படிச் செல்கிறார்" என்றெண்ணி மலைத்தனர். கிருஷ்ண பகவானும் தருமநந்தனரின் கூடவே சென்றார். பீமன் முதலிய நால்வரும் ஒன்றையும் விசாரியாமல் தரும நந்தனரையே பின் பற்றினர்.

காரியத்தில் கருத்துடைய அறிவாளியாகிய தரும புத்திரர், ஐந்து கிளைகளையுடைய பனைமரக்கொடியையுடைய இரதத்தை நோக்கிச்சென்று அதன் கண் சூரியனைப்போல் ஜ்வலித்துக்கொண்டிருந்தவரும் வயதானவராயினும் சிறுபிள்ளையாகக் காணப்படுகிறவருமாகிய பீஷ்மரைக்கண்டு பக்தியுடன் அவரைச் சாஷ்

டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுந்தார். பீஷ்மர், "அப்பா, தருமநந்தனு, உன் மனோபாவமெல்லாம் கை கூடக் கடவன!" என்று ஆசீர்வாதம் செய்து, "தரும நந்தனு, நீ உன்னுடைய பகைவர் பக்கத்தில் உன்னை எதிர்ப்பதற்காக வந்து நிற்கும் என்னிடம் இப்போது வந்து குரு விசுவாசம் மறவாமல் என்னை வணங்கியது கண்டு நான் திருப்தியடைந்தேன். நீ தருமத்தையே பிரதானமாக எண்ணிக் காப்பவனுதலால், உன் சித்தம் இப்படித் திரும்பியது. அந்தத் தர்மமே உன்னைக் காக்கக் கடவது! தர்ம சீலனுகிய உனக்கு உபகாரம் செய்ய இயலாதவனுனது ஒரு பக்கமிருக்க அபகாரஞ்செய்யத் துணிந்து நிற்கிறேன். இதற்குக் காரணத்தை நீயே அறிவாய். ஒருவன் தருமத்தைப் பிரதானமாகக் கொண்டிருந்தாலும் பொருளினுல் வேறு விதமாக நடக்கும்படி நேரிடுகிறது. உன்னுடைய பகைவனுடைய வீட்டில் வெகுகாலமாக இருந்து அன்ன முண்டேனல்லவா? அந்தச் சோற்றுக் கடனைக் கழிக்கவே இவ்வாறு உனக்கு விரோதமாக நின்று அவனுக்கு உதவிசெய்ய நேர்ந்தது. ஒருவன் செய்த உதவிக்குப் பதிலுதவிசெய்து தீரவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கடன் பரலோகத்திலும் அவனுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைக்குத் தடையாக நிற்குமன்றோ? மனிதனுகப் பிறந்தவன் தன் கடனைத் தீர்த்துக்கொண்ட பிறகுதான் பரலோகத்திற்குப் புறப்படவேண்டும். ஒருவன் புண்யஞ்செய்தவனுக இருப்பான். இருந்த போதிலும் அவன் கடனுளியாயிருந்தால் அவனைப் பிதிர்த்தேவதைகள் பரலோகத்தில் கௌரவப்படுத்த மாட்டார்கள். ஆகையினுல் நான் என் கடனைத் தீர்க்க

இச்சமயம் இந்தக்கோலம் கொள்ளவேண்டியதாயிற்று. தருமநந்தனே, சண்டையில் என்னுடைய உதவியைக் கேளாதே! வேறு ஏதேனும் விருப்பமிருந்தால் கேள்'' என்றார்.

தருமநந்தனர், "நீர் கூறிய நியாயம் சரியே. சந்தோஷம். ஆனல் ஒருவரம் வேண்டும்'' என்று கேட்டார்.

பீஷ்மர்:—அது என்ன?—என்று கேட்டார்.

தருமநந்தனர்,—பிதாமகரே, உம்மை வெல்லும் வழியை எனக்குச் சொல்லவேண்டும்—என்று கேட்டார்.

இதைக்கேட்டதும் பீஷ்மர், நகைத்து, "இப்படி எவனுவது கேட்பானு? பூலோகத்தில் உன்னைப் போன்ற மனிதனை நான் பார்த்ததே யில்லை. வில்லைக் கையிலேந்திப் புறப்பட்ட பீஷ்மனிடம் ஜயத்தை எதிர் பார்ப்பவன் யாவன்?—இருந்தாலும் நீ அநுக்ரஹம் பெற வேண்டியவனுயிருக்கிற படியால், சமயத்தில் நான் கவனித்துக் கொள்கிறேன். நீ போ'' என்றுகூறித் துரியோதனனுடைய செவியிற்படும்படி, "தருமநந்தனே, ஜயமுண்டாகக்கடவது'' என்று வாழ்த்துக்கூறி உடனே பாணத்தைத் தமது திருக்கரத்திலெடுத்தார்.

பீஷ்மரிடம் துரியோதனனுடைய கோபம் ஒன்று செல்லாதாகையினல் அவர் "தரும புத்திரர் ஜயம் பெறட்டும்'' என்று கூறக்கேட்டும், அதைக் கவனியாதவன்போல் அவன் சும்மாவிருந்து விட்டான். அவரை எதிர்த்துக்கொண்டால் இனி நமக்குவேண்டிய காரியத்துக்கு யார் துணை செய்வார்கள். இதையும் ஆலோசித்த

வண்ணம் வேறு எதையோ பேசி, பேச்சை மறைத்து விட்டான்.

பீஷ்மர் இதையறிந்து தமக்குள் மகிழ்ச்சிகொண்டு அமர்புரியத் தொடங்கினர். இச்சமயம் அவர் ஒரு வருடைய சகாயத்தையும் விரும்பாமல் தமக்குத் தம் வில்லையே சகாயமாகக் கொண்டார். பகைவர்களுடைய சைன்யத்திற் புகுந்து மந்தரமலை பாற்கடலைக் கலக்கி யதுபோல் கலக்கினர். அப்பொழுது எல்லோரும் கத றினர்கள்; அர்ஜுனனும் கதிகலங்கிச் சும்மா விருந்து விட்டான்; அர்ஜுனனுக்கு ரதஸாரதியாக இருந்த பக வான், உடனே தாம்பிடித்துக்கொண்டிருந்த கடிவா ளத்தை யெறிந்துவிட்டு, "இதோ உங்களுடைய கஷ் டங்களை ஒரு நொடியில் நான் விலக்குகிறேன். பயப்ப டாதீர்கள்" என்றுகூறித் தேரிலிருந்து குதித்து உத் தரியம் தரையிற் புரள நடந்து பீஷ்மரிடம் சென்று "நில்" என்றார்.

பீஷ்மர் பகவான் அவ்வாறு கூறியதும் வியப் புற்று நின்று, "சக்கராயுதந் தரித்தவரே, வாரும், நாம் யமனுடைய தண்டத்திற்கும் அஞ்சுவதில்லை. உமது சக்தி எங்கும் தடையற்றதென்பதை நாம் அறிவோம். மரங்களைப் பிளக்க உபயோகிக்கும் கோடரியை மலை யைப்பிளக்க உபயோகித்தால் எப்படிமழுங்கிப்போமோ அப்படியே என்னைப்போன்றவரிடம் உமது சக்தி கூர் மழுங்கிவிடும். இந்தச் சரீரம் வருவதும் போவதுமாயி ருப்பதாகையினல் இதனிடம் எமக்கு ஒரு சிறு அபிமா னங்கூடக்கிடையாது. ஆனல் பொய்சொல்ல மாத்திரம் நாம் அஞ்சுகிறேம். பொய்தான் பெரிய யமன்! இப்

போது நாம் அமர்புரிவதுகூட அதற்காகவேதான். பாண்டவர்களிடம் பகைகொண்டாவது துரியோதன னிடம் நட்புக்கொண்டாவதல்ல. நீர் இப்படி ஆயுத மெடுக்காமலிருந்தால் என் பிரதிக்ஞை நிறைவேறுவ தெப்படி? பிரபுவே, உமது பக்தனுகிய இந்த பீஷ்மன் ஸத்ய ஸந்தனுகும்படி செய்யும். இந்த உபகாரத்தினுல் நான் உமக்குக் கடனுளியாவேன். நான் உமக்கு எந்த விதமான உபகாரஞ்செய்து அந்தக்கடனைத் தீர்த்துக் கொள்வேன். அது முடியாதாகையினுல் உம்முடைய இந்த உபகாரம் என்னிடமே லயமடையட்டும்'' என்ருர்.

இப்படி பீஷ்மர் தர்ம நியாயத்திற் கட்டுப்படுத்திப் பேசவே பகவான் "உமது நியாயம் என்னைக் கட்டுப் படுத்துகிறது'' என்றுகூறிய வண்ணம் திரும்பிவிட்டார். இப்பொழுது அஸ்தமனமாகும் சமயம் வந்தது. வழக்கப்படி சேனைத்தலைவர் சண்டையை நிறுத்தினுர்கள்.

பிறகு மறுநாள் தொடங்கி எட்டு நாள் வரையில் இருதரத்துச் சேனைகளுக்குள்ளும் பெரும் போர் நடந்தது. பின் ஒன்பதாவது நாள், துரியோதனன் பீஷ்மரை அவமதிப்பாகப் பேசினுன். பீஷ்மர் உடனே கோபங்கொண்டு போர்செய்யத் தொடங்கிப்பகைவரின் படைவீரர்களையெல்லாம் அதமாக்கினுர்; எங்கே கண்டாலும் உதிரம் வெள்ளமாகப் பெருகும்படி செய்தார். "இதோ இருக்கிருன் பரசுராமருடைய மாணுக்கன்! வாருங்கள்! வாருங்கள்!'' என்றுகூறித் தம் முன்வந்து எதிர்த்த வீரர்களை யெல்லாம் தமது வில்லுக்கு இறை யாக்கிவிட்டுப் பாசறை புகுந்தார்.

இப்படி பீஷ்மர்போரில் முனைந்து நின்று அதஞ் செய்யவே, தருமபுத்திரர் பயந்து, அவரிடம் ஓடி வணக்கத்துடன் நின்று, "பிதாமகரே, நாங்களுய்ய வழிகாட்டுங்கள்'' என்று தளர்ந்த நெஞ்சுடன் கேட்டார். அப்பொழுது தருமநந்தனர் கண்களிலிருந்து நீர் தாரை தரையாகப் பெருகியது. தருமபுத்திரருடைய அந்த நிலையைக் கண்டதும் பீஷ்மர் அவர்மீது இரக்கங் கொண்டு அந்தோ! தருமந்தவறுத இவன் என்னால் பெருந் துன்பத்திற்குள்ளானன்! இவன் தன் உயிருக்குக் கேடுநேரிடும் என்று என்னிடம் சந்தேகம் கொள்கிறன். பாண்டவர்கள் நம்முடைய குழந்தைகள். இவர்களுக்கு நம்மாலேயே ஆபத்தென்றல் இது பெரிய சங்கடமன்றே?—ஆபத்திலிருப்பவனே உதவிபெறத் தக்கவன். ஒருவன் தர்மிஷ்டனனல் அவன் தர்ம சிந்தனையுடையவர்களுடைய கூட்டத்திலொருவனுவான். புண்யவானகவும் நல்ல தர்மிஷ்டனகவும் இருக்கும் ஒருவன் கொடுக்கும் தர்ப்பணத்தில் பிதிரர் திருப்தியடைகின்றனர். இவன் அப்படிப்பட்ட யோக்யதையுடையவன். ஆகையினல் இவனை என் சரீரத்தை மாய்த்துக்கொண்டாவது காப்பாற்ற நான் கடமைப்பட்டவன்'' என்று கருதித் தருமநந்தனரை நோக்கி, "யுதிஷ்டிரா, அஞ்சாதே! உன் உள்ளத்தை நான் உணர்ந்தேன். அர்ஜுனன் என்னேடு சண்டை செய்யும்போது, என் பகைவனகிய சிகண்டியை முன்னே வைத்துக்கொண்டு சண்டை செய்யட்டும். அப்பொழுது அர்ஜுனனே ஜயமடைவான். நீ கவலைப்படாமல் போய் காரியத்தைக் கவனி! பீஷ்மன் ஒருபோதும் தருமந்தவறி நடக்கமாட்டான் என்பதை மனதில் மறவாமற் கொள்ளக்கடவாய்'' என்று கூறியனுப்பினர். அன்றுபொழுது அஸ்தமனமாயிற்று. (வரும்).

மதியீனனுடைய ஸ்நேகம்

ஒரு மாப்பிள்ளை தோழப்பிள்ளையாக இன்னொருவனை அழைத்துக்கொண்டு மாமனார்வீட்டிற்குப் போனான். மாப்பிள்ளை பரம ஏழை. ஆகையினால் அவன் தன் தலைப்பாகையைத் தவிர மற்ற உடைகளையெல்லாம் ஒருவரிடமிருந்து இரவலாகப்பெற்று அணிந்துகொண்டு சென்றான். தலைப்பாகைமட்டும் அவனிடமிருந்தது. இப்படி அவன் ஆடைகளை இரவல்வாங்கி அணிந்திருப்பதை ஒருவரிடமும் சொல்ல வேண்டாமென்று தன் தோழனுக்குச் சொல்லியிருந்தான்.

இவர்கள் மாமனார் வீட்டையடைந்து ஓரிடத்தில் அமர்ந்தார்கள். அப்பொழுது மாமனார் வந்து இவர்களை வரவேற்று உடனே மாப்பிள்ளைத் தோழனைப்பார்த்து, "தம்பி யோகக்ஷேமம் என்ன?" என்று கேட்டார். தோழன், மாப்பிள்ளைக்குப் பாகைமாத்திரம் சொந்தந்தான். மற்றும் அவன் அணிந்திருக்கும் உடைகளைப்பற்றி என்னைக் கேளாதேயுங்கள்" என்றான். இப்படிச் சொல்லக்கேட்டதும் மாப்பிள்ளை அவமானத்திற்குள்ளாய்ச் செத்தபிணமானான். அந்தோ! இந்த மதியீனனைத் துணையாக அழைத்துவந்தோமே மதியீனருடைய ஸ்நேகம்! பெருமை தராதென்று கூறுவதை இப்போது அநுபவத்தில் கண்டேன்! மதியீனன் பீமஸேனனைப்போல் பலம்படைத்தவனானாலும் அவன் துணை சங்கடமே தரும். நன்மைதராது மதியீனனிடத்தில் பலமிருப்பினும் சரி, பணமிருப்பினும் சரி —அவை நல்லபயனை அளிக்கமாட்டா" என்றெண்ணி அந்த நிமிஷத்திலேயே அவனுடைய சிநேகத்தை ஒழித்தான்.

ஆன்ரோர் வீரமொழிகள்

[ஸ்ரீமான் கே. எஸ். மணியனின் மொழிபெயர்ப்பு.]

"பரிபூர்ணமான அஹிம்ஸாநிலையை அடையாதவனும் சரி, சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகாதவனும் சரி, தன்னடக்கமான பிரம்மசரிய விரதமில்லாதவனும் சரி, பொன்னாசையைக் கைவிடாதவனும் சரி, சாஸ்திரத்தை உணராதவர்கள் என்று நம் ஹிந்து மதம் போதிக்கின்றது. இதனை நான் அப்படியே நம்புகிறேன்" மகாத்மா காந்தி.

"பயப்படாமலிருக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மூடத்தனமாகவும், அசட்டையாகவும் இருந்து நீங்கள் உங்களது காலத்தை வீணாக்கவேண்டாம். உங்களுடைய அபிப்பிராயத்தையும், தீர்மானத்தையும் அரசாங்கத்தினருக்கு அறிவிப்பதில் நீங்கள் சிறிதும் பயப்பட வேண்டியதில்லை. தங்களுக்கு வேண்டிய வற்றைக் கேட்கப் பயப்படுகின்ற குடிகள் அவற்றைப் பெறுதற்கும் தகுதி யுடையவர்களாகார். அரசாங்கம் அளிக்கட்டும், அளிக்காமற் போகட்டும் நம் நாட்டின் நன்மைகளுக்குக் கட்டாயம் வேண்டியிருப்பனவற்றையே நாம் கருதவேண்டும்" தேச பந்து தாஸர்.

"இந்தியாவினிடம் எனக்கு மிகுந்தபற்றும் அபிமானமும் உண்டு. ஏனெனில் எனக்குள்ளனவெல்லாம் இந்தியாவிலிருந்தே கிடைத்திருக்கின்றன. உலகனைத்திற்கும் போதிக்கும்படியான பாக்கியமும், சக்தியும், கடமையும் இந்தியாவுக்கு உண்டு. வாள்வலியும் தோள்வலியும் சிறந்தன என்று இந்தியா கருதுமாயின் அது எனக்குச் சோதனை காலமாகும். அப்பொழுது நான் இந்தியாவை எதிர்த்து நிற்கத் தயங்க மாட்டேன். உலகிலுள்ள அனைவரும் சுகமே வாழ்ந்து வரவேண்டுமென்பதுதான் எனது மதமும் நோக்கமுமாகும்". மகாத்மா காந்தி.

"மனச்சாட்சிக்கு விரோதமாய் எவனும் நன்றி காட்ட முடியாது; கற்பைக்களைந்து எப்பெண்ணும் நன்றிகாட்ட இயலாது; அவ்வாறே சுதந்திரத்துக்குப் பங்கமாய் எத்தேசத்தினரும் நன்றிகாட்ட முடியாது" கிரேட்டன்.

"இந்தியாவிலே நமக்குள்ள ஆதிக்கமும் அதிகாரமும் நெடுக நீடித்திருக்கவேண்டுமா? அல்லது போய்விடவேண்டுமா? என்ற கேள்விகளை ஆலோசனை செய்து தீர்மானிக்க வேண்டியவர்கள் யார்? இந்தியா தேசத்திலுள்ள ஜன சமுகத்தினரே யாவர். இந்திய நாட்டிலே யாருக்கு எல்லா ஆதிக்க

மும் இருக்கவேண்டுமென்று நிதானிக்கும் உரிமையும் தர்மமாய் இந்தியருக்குத்தான் உண்டு. இந்தியாவிலே நமது ஆதிக்கம் நீடித்து நிலை பெற்றிருக்க வேண்டுமானல் முதலாவதாக நம்மால் இந்தியர்களுக்கு நன்மையும் லாபமும் உண்டாக வேண்டும்; அஃதோடு ஆங்கிலேயர்களால் தங்களுக்கு நன்மை கிடைக்கின்றதென்று இந்தியமக்கள் உணர்ந்துகொள்ளும் வண்ணம் நாம் நடக்கவும் வேண்டும்'' கிளாட்ஸ்டன்.

"ஆடவர்களுடன் போட்டியிடுதல் பெண்மணிகளின் இயற்கையன்று. ஆடவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளைப் பூர்த்திசெய்தலே பெண்களுக் கேற்பட்ட கடனாகும். ஆதலின் வாழ்வுத்துறையில் புருஷர்களுடன் போட்டியிட்டுப் பொருள் சேகரிக்க முயலுதல் மாதர்களுக்கு நலந்தருவதாகாது. வாழ்க்கை என்னும் பிரயாணத்தில் ஸ்திரீ ஆடவனுக்குத் துணைவியாகப் படைக்கப்பட்டிருக்கின்ருளென்பதில் ஐயமில்லை. எனவே ஒருவனுக்குத் துணைசெய்வதெனில் அவன் செய்வதைப்போல் தானும் செய்வ தன்று''

கவியரசர் ரவீந்திரநாத் தாகூர்.

"வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களுக்காக நாம் அன்னிய நாட்டவரை நம்பியிருப்பதில் இருவகை நஷ்டங்களுக்கு ஆளாகின்றோம். அப்பொருள்களுக்காக ஏராளமான பணம் நம் நாட்டைவிட்டு அன்னிய நாடுகளுக்குச் செல்வது முதல் வகை நஷ்டம். அந்தப்பெருந்தொகை வெளிநாடுகளுக்கு அனுப்பப்படாமல் நம் நாட்டிலேயே இருந்தால், அது நம் நாட்டிலேயே சுற்றி மற்ற வியாபாரங்கள், கைத்தொழில்கள் முதலியவற்றின் அபிவிருத்திக்குப் பெரிதும் துணைசெய்யும். நாம் இவ்வுதவியை இழப்பது இரண்டாம் வகை நஷ்டம்'' சர். எம். விச்வேஸ்வரய்யா.

பெண்கள் ஆடவர்களுக்காகத் தியாகம் செய்யக்கூடிய அளவு, ஆடவரால் பெண்களுக்குத் தியாகம் செய்யமுடியாது. பெண்கள் உண்மையாக அன்புசெய்யும் போது அவ்வன்பின் வலிமை எல்லையற்றதாய் விடுகின்றது. அவ்வேளையில் அவர்கள் தங்கள் அன்பர்களுக்குச் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமேயில்லை''. கவியரசர் ரவீந்திரநாத் தாகூர்.

இந்தியா தனக்குவேண்
டியதை தானே தேடிக்
கொள்கின்றதா?



ஆம்! நீங்கள் உள்நாட்
டுக் கைத்தொழில்களை
ஆதரித்தால்
மதராஸ்
பாக்டரி,
86. மதராஸ்.

அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

விசேஷ ஔஷதம்

அமிர்தாஞ்சனம்	டப்பி 1-க்கு	0	10	0
மோஹினி தைலம்,	பாட்டில் 1-க்கு	0	12	0
படை மருந்து	டப்பி 1-க்கு	0	6	0
பல் பொடி	டப்பி 1-க்கு	0	2	0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் டிப்போ

7, தம்புச்